விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 | ர்ளுவர் ஆண்டு 2037 | தை 06 வியாழக்கிழமை (19..01.2006) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 31

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# அன்ரன் பாலசிங்கத்தின் பயணத்தை தடுக்கக் கோருகிறது ஹெல உறுமய

## தேர்தல் வாக்குறுதிகளை மீறவேண்டாமென ஜனாதிபதி மகிந்தவிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிர்வரும் 23ந் திகதி வரவுள்ள எரிக்சொல்ஹெய்ம் மற்றும் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரின் விஜயத்தை தடுத்து நிறுத்துமாறு ஜனர்திபதியிடம் ஜாதிகஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த கால அரசாங்கங்களைப் போலவே மகிந்தவின் அரசாங்கமும் அமைதி முயற்சிகள் என்ற பெயரில் இலங்கையின் இறைமைகளை விடுதலைப்புலிகளிடம் ஒப்படைப்பதற்கு முயற்சிப்பதாக ஜாதிகஹெல உறுமய குற்றஞ்சாட்டியுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரித்தானிய பிரதித்தூதுவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நிலவும் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக ஆராய்வதற்காக இலங்கைக்கான பிரித்தானிய பிரதித் தூதுவர் தலைமையிலான குழுவொன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

பிரதித்தூதுவர் லெஸ்விக்ரேட் மற்றும் பிரித்தானியத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கொலின் மார்டின் ஆகிய இருவரும் இருநாள் விஜயம் மேற்கொண்டு நேற்று முன்தினம் பலாலியை வந்தடைந்தனர்.

அங்கு பலாலி பாதுகாப்புத் தலைமையகத்தில் யாழ்.பாதுகாப்புத்தளபதி மேஜர் ஜெனரல் ஜி.எ.சந்திரசிறி ஆகியோரைச் சந்தித்துப்பேசினர். இச் சந்திப்பில் யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் பாதுகாப்பு பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் யாழ்.நகரப்பகுதிக்கு வந்த பிரித்தானியப் பிரதித்தூதுவர் நிலைமைகளை நேரில் அவதானித்ததுடன் பிரித்தானிய உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் நிர்மாணப்பணிகளையும் பார்வையிட்டார். நேற்று மாலை யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக்கொண்டு அவர் கொழும்பு திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-39)

## இரா. சம்பந்தனுடன் ஜனாதிபதி உரையாடல்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற குழுத்தலைவர் இரா.சம்பந்தனுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு உரையாற்றியுள்ளார்.

இவ்வுரையாடல் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றுள்ளது. தமிழ்க் கட்சிகளினால் பாராளுமன்றத்தினுள் மேற்கொள்ளப்பட்டு வரும் போரராட்டங்கள் குறித்தே பேசப்பட்டதாக தமிழ்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு கிழக்கில் இடம்பெறும் கொலைகள், ஆள்கடத்தல் மற்றும் படையினரின் அட்டூழியங்கள் என்பவற்றை நிறுத்தக்கோரி தமிழ் எம்.பிக்கள் பாராளுமன்றத்தினுள் நேற்று முன்தினம் தொடக்கம் போராட்டங்களை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-39)

## காரைநகர் கடலில்

## தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கடற்படை கண்மூடித்தனமாக தாக்குதல்

### ஆறு மீனவர்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடலில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த ஆறு மீனவர்கள் கடற்படையினரால் மிகமோசமாகத் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 12.30 மணியளவில் மூன்று படகுகளில் சென்ற ஆறு மீனவர்களே தாக்கப்பட்டுள்ளனர். சம்பவம் பற்றித் தெரியவருவதாவது , நேற்று அதிகாலை மூன்று படகுகளில் இருவர் வீதம் ஆறு மீனவர்கள் நடுக்கடலில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த வேளையில் இரண்டு படகுகளில் வந்த கடற்படையினர் அவர்களை தமது படகில்ஏறுமாறு சரளமானதமிழில்கூறியுள்ளனர்.

இதற்கு மீனவர்கள் மறுப்புத் தெரிவிக்கவே கடற்படையினர் அவர்களை தமது படகுக்குள் இழுத்து இரும்புக் கம்பிகளினாலும் துப்பாக்கியினாலும் கடுமையாகத் தாக்கியுள்ளனர். அவ்வேளை, தமது படகில் இருந்த வெளிச்சத்தை கடற்படையினர் அணைத்து விட்டே தம்மைத் தாக்கியதாக மீனவர்கள் தெரிவித்தனர்.கடற்படையினரின் தம்மைத் தாக்கிய பின் தமது படகினுள் தூக்கி வீசியதாக படுகாயமடைந்த மீனவர் ஒருவர் தெரிவித்தார். அதன் பின்னர் மிகவும் கஷ்டப்பட்டு கரை சேர்ந்தாக தெரிவித்தனர்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான சோமு லோகேஸ்வரமூர்த்தி (வயது 44) , நான்கு பிள்ளைகளின் தந்தையான வேலுப்பிள்ளை இராசரத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியிலும் கொடிகாமத்திலும் நேற்றுக் காலை கிரனைட் தாக்குதல்

### இரு சிப்பாய்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் மற்றும் சாவகச்சேரியில் நேற்று இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட கிரனைட் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் காயமடைந்தனர். நேற்று காலை 9.30 மணியளவில் இத்தாக்குதலையடுத்து அப் பகுதியில் நின்ற பொதுமக்கள் இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

வைத்தியசாலையில் கட்டடவேலையில் ஈடுபட்டோரும், தேநீர்க்கடை உரிமையாளரும் இராணுவத்தின் தாக்குதலிருந்து தப்பவில்லை. இதேவேளை நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் சாவகச்சேரி சங்கத்தானையில் இராணுவத்தின் தண்ணீர் பௌசர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து அப்பௌசர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் எம்.பிக்களால் நேற்றும் பாராளுமன்றம் முடங்கியது !

(கொழும்பு)

பாராளுமன்றத்தை இரண்டாவது நாளாக நேற்றும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் முடக்கினர்.சுமார் 30 நிமிடங்களே பாராளுமன்ற செயற்பாடுகள் நேற்று நடைபெற்றது.சபாநாயகர் டபிள்யூ.ஜெ.எம்.லொக்குபண்டார தலைமையில் நேற்று காலை பாராளுமன்றம் கூடியது.

பாராளுமன்றம் கூடியதையடுத்து தமிழ் மக்கள் மீதான படுகொலைகளைக் க்ண்டித்து அனைத்து தமிழ்க்கட்சி உறுப்பினர்களும் சபை மத்திக்குச் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் பதாகைகள் ஏந்தியவாறு முழக்கங்களையும் எழுப்பினர்.நேற்றுக் கூடிய பாராளுமன்றத்தில் பல சட்ட மூலங்கள் நிறைவேற ஏற்பாடாகியிருந்தது. சட்ட மூலங்களை நிறைவேற்றும்போது சபாநாயகர் பாராளுமன்ற செயலாளரின் இருக்கையில் அமர வேண்டியிருப்பதால் சபாநாயகர் தமது ஆசனத்தில் இருந்து எழுந்து செயலாளரின் ஆசனத்திற்கு செல்வதற்கு முயல்கையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.சிவாஜிலிங்கம் சபாநாயகரின் ஆசனத்தில் சென்று அமர்ந்தார்.

அதேநேரம் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச்சந்திரன் ஓடிச்சென்று செயலாளரின் ஆசனத்தில் அமர்ந்தார். இதனால் பாராளுமன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது சபாநாயகர் பாராளுமன்றத்தை இன்று காலை 9.30 மணிவரை ஒத்திவைத்தார்.

தமிழ் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் தங்கள் ஆசனங்களில் இருந்தே (12 ஆம் பக்கம் பார்க்க)



# மண்ணாசையால் மதிப்பிழக்கும் மாஜி ஜனாதிபதி

இலங்கையின் அரசியல் வரலாற்றிலேயே முதன் முறையாக பெறுமதி மிக்க காணித் துண்டொன்றை இலவசமாகப் பெற்ற



பெருமை இருமுறை நிறைவேற்றதிகாரமுள்ள ஜனாதிபதியாகப் பதவிவகித்த பின் தற்பொழுது ஓய்வுபெற்றிருக்கும் சந்திரிகா அம்மையாரையே சாரும்.

அமைச்சரவைத் தீர்மானத்தின்படி 1986ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஜனாதிபதி சிறப்புரிமைச் சட்டத்தையும் மீறி முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகாவுக்கு மதிவெல என்ற பிரதேசத்தில் ஒன்றரை ஏக்கர் காணி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியல் யாப்பு விதிகளின்படி அமைச்சரவைத் தலைவராகவும், அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் கொண்டவராகவும் அமைச்சரவைக் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பவராகவும், தேவையானால் அமைச்சுக்களை தன்னகத்தே வைத்திருக்கும் உரிமை கொண்டவராகவும் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி விளங்குகிறார்.

'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்ற முதுமொழிக்கு அமைவாக, தங்களுக்கு சகல சுக போகங்களையும் அனுபவிக்கும் வல்லமை கொண்ட அமைச்சர் பதவிகளை வழங்கி, தங்களை வாழவைத்த தெய்வமாகிய சந்திரிகாவுக்கு நன்றி செலுத்துமுகமாக அமைச்சரவை இத் தீர்மானத்தை எடுத்திருக்கலாம். ஆனால் அரச சொத்துக்கள் அமைச்சர்களின் சொந்தச் சொத்துகள் அல்ல என்ற அடிப்படை உண்மையை அமைச்சரவைமறந்துவிட்டது தான் ஆச்சரியம்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்கு அண்மித்ததாயுள்ள மதுவெல பகுதியில் காணிகளின் மதிப்பு உச்சநிலையில் இருக்கிறது. 'ஊரார் வீட்டு நெய்யே, என் பெண்டாட்டி கையே' என ஒருவன் கூறியது போல, 'தெருவில் தேங்காயை எடுத்து வழியில் பிள்ளையாருக்கு அடிப்பதைப் போல, அரச காணியை அவருக்கு அளித்து அமைச்சரவை தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டுள்ளது.

சந்திரிகா அம்மையார் குடியிருக்க வீட்டு வசதியற்ற சாதாரண குடும்பத்தையோ அல்லது ஏழைக் குடும்பத்தையோ சேர்ந்தவர் அல்லர். குடியிருக்க வீடில்லாமல், வீடு கட்ட நிலம் இல்லாமல் கஷ்டப்பட் டவரும் அல்ல. 'வளவு காரய' என சிங்களத்தில் அழைக் கப்படும் நிலச் சுவாந்தார் குடும்பத்தைச் சேர்ந்தவர். செல்வ செழிப்புமிக்க குடும்பத்தைச் சேர்ந்த அவருக்கு இந்தக் காணித் துண்டை ஒதுக்கிக்கொடுக்க அமைச்சரவை முடிவெடுத்தது பற்றி மக்கள் ஆச்சரியம் தெரிவிக்கிறார்கள். அமைச்சரவை அதிகார துஷ்ரபிரயோகத்தில் ஈடுபட்டு விட்டதா என அதிசயப்படுகிறார்கள். அமைச்சரவை எடுத்த இந்தத் தீர்மானத்தை சந்திரிகா ஆட்சேபித்திருந்தாரானால் அவரது பெருந்தன்மையை மக்கள் மெச்சியிருப்பார்கள். ஆனால் அவரோ அளப்பற்ற மனமகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

அதுமாத்திரமன்றி, இவருக்கு முந்தியகால ஜனாதிபதிகளான் ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாச, விஜேதுங்கா போன்றவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டைவிட பெருந்தொகை நிதி, அதைவிட அணி தேர் புரவி ஆட்பெரும் படை என ஏராளமான வசதிகள் ஒதுக்கப்பட்டிக்கிறது. தனியொருவருக்கு இத்தனை பெரும் தொகை நிதி ஒதுக்கீடு செய்தமை குறித்து பிரதம நீதியரசரே ஆச்சரியம் தெரிவித்திருக்கிறார்.

இந்த விடயங்கள் பத்திரிகைச் செய்திகளோடு மாத்திரம் நின்றிருந்தால் மக்கள் இதுபற்றி பேசிக் களைத்து ஈற்றல் மறந்தும் இருப்பார்கள்.

ஆனால் 'ராவய' என்ற சிங்கள பத்திரிகை ஆசிரியரான விக்டர் ஐவன் இந்த முறைகேடுகளைக் கண்டு கண்மூடி, வாய் புதைத்து இருக்க விரும்பவில்லை கொடுமை கண்டு பொங்கும் குணமுள்ள அவர் இதனை மேல்முறையீட்டு நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்றதையடுத்து விடயம் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது. விக்டர் ஐவனின் வழக்கை ஆராய்ந்து விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான கே.ஸ்ரீபவன் சிசிர டி ஆப்ரூ ஆகியோர் அடுத்த மாதம் 20ஆம் திகதி நீதிமன்றத்தில் சந்திரிகாகுமாரதுங்கவை ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு வழங்கப்பட்டுள்ள விசேட பாதுகாப்பு மற்றும் ஆளணிவசதிகள் குறித்து விக்டர் ஐவன் தாக்கல் செய்த மற்றொரு மனுவும் அன்றையதினம் விசாரணைக்கு வருகிறது.

அமைச்சரவை சந்திரிகாவுக்கு தனது நன்றிக்கடனைத் தெரிவிக்க விரும்பினால் அமைச்சர்கள் ஒவ்வொருவரும் அவரவர் சொந்தப் பணத்தைக் கொண்டு பல நூறு ஏக்கர் காணியை வாங்கி அன்பளிப்பாக வழங்கியிருந்தால் அதனை எவரும் ஆட்சேபிக்கப்



போவதில்லை. ஆனால் இது மக்களுக்குச் சொந்தமான அரச காணி.

இந்தவிதமாக அரச காணி விவகாரத்தில் கைவைத்த காரணத்தாலேதான் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா இன்று நீதி விசாரணையை எதிர்நோக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார். டான்சி நில வழக்கில் அந்த நிலத்தை அரசாங்கத்திடமே திரும்ப ஒப்படைக்குமாறு நீதிமன்றம் அவருக்கு உத்தரவிட்டுள்ளது. 'அரச சொத்து நெருப்பைப் போன்றது அதனைக் கையாளுவோர் மிக்க அவதானத்துடன் இருக்க வேண்டும்.'

மதவெலகாணி விவகாரவழக்கு எந்தத் திசை நோக்கிச் செல்லும் என்பதை பொது மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். (ராஜ்)

## இராசி பலன்

**19.01.2006**
**(தை 6, வியாழக்கிழமை)**
**பஞ்சமி பின்னிரவு 01.30 மணிவரை**
**பூரம் காலை 7.58மணிவரை**
**இராகுகாலம் 02.05-3.35 மணிவரை**
**சுபநேரம் 8.05-9.35 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, பண விரயம், போசனசுகக்குறைவு, |
| இடபம் | கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், ரோக நிலை, அற்பர் நேசம். |
| மிதுனம் | இனிய அனுபவம், கூட்டு முயற்சி, வாக்கு மேன்மை, பணவசதி. |
| கடகம் | மதிப்புக்குறைவு, காரியதாமதம், பொருள் விரயம், உணர்ச்சிவசப்படுதல். |
| சிங்கம் | பெரியோர் ஆசி, நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம். |
| கன்னி | பிதா சிந்தை, பணவிரயம், வாக்குமேன்மை, முயற்சி தாமதம். |
| துலாம் | காரிய அனுகூலம், பெருமையடைதல், மன மகிழ்ச்சி, பொருள் சேர்க்கை. |
| விருச்சிகம் | தொழில் மேன்மை, காரிய சித்தி, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| தனுசு | ஆன்றோர் மதிப்பு, பிரயாணம், உடல்நலக் குறைவு, அச்சமான நிலை. |
| மகரம் | காரிய தடங்கல், வீண்தொல்லை, அபகீர்த்தி, போசன சுகம். |
| கும்பம் | வாகன வசதி, திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு பணவருவாய். |
| மீனம் | தொழில் நன்மை, சுகவாழ்வு, பகைவர் நேசம் காரிய சித்தி. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
- வளவன்

# யாழ்.குடாநாட்டில் தொடரும் வன்முறைகளை அரசு உடனடியாக தடுத்துநிறுத்த வேண்டும்!

## தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டில் தொடரும் வன்முறைகளை அரசு உடனடியாகத் தடுத்துநிறுத்த வேண்டும் அவ்வாறு அரசு தடுத்து நிறுத்தாவிட்டால் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் கிளர்ச்சிமூலம வன்முறைச் சம்பவங்கள் தடுத்து நிறுத்தப்படும்.**

**இவ்வாறு தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.குடாநாட்டில் தொடரும் அரசபடை மற்றும் இதனுடன் இணைந்தியங்கும் ஒட்டுக்குழுக்களின் அப்பாவி பொதுமக்கள் மீதான கொடூர வெறித்தனத்தினை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கடந்த சில மாதங்களாக அரச படையின் புலனாய்வுத்துறையும் சில ஒட்டுக்குழுக்களும் அப்பாவி பொதுமக்களை கடத்துவதும் ஆயுதங்கள் மூலம் சுட்டும் வெட்டியும் மற்றும் பெண்கள் கொடூரமாக பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கி கொல்வதும் காட்டுமிராண்டித்தனமாக பொதுமக்களை கொல்வதும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

இதற்கு பருத்தித்துறையில் அரச படையின் பாதுகாப்புடன் வானில்வந்த ஒட்டுக்குழுவினர் கடந்த 11ஆம் திகதி காலை 3 மணி அளவில் இரு இளைஞர்களை கடத்திச்சென்றுள்ளனர். அரச படையினரின் பாது காப்பால் பதுங்கியுள்ள சக்திகளே இதனை நடத்தி வருகின்றது என்பது பொது மக்கள் யாவரும் அறிந்ததே.

இதனைத் தொடர்ந்து மானிப் பாயில் 16ஆம் திகதி காலை 12.40மணியளவில் ஆயுதம் தரித்த அரச படையினரும் ஒட்டுக் குழுக்களும் இணைந்து நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த அப்பாவிப் பெண்கள் 3 பேர் பலியானார்கள். அத்துடன் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டில்மட்டுமல்லதிருகோணமலையிலும் அண்மையில் வீட்டின் மீது கைக்குண்டு வீசப்பட்டது இதன் போது அப்பாவிக் குழந்தை உட்பட பலர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.

தமிழர் தாயகமெங்கும் அரச புலனாய்வாளர்கள் தமது இயலாமையினை பொதுமக்கள் மற்றும் பெண்கள்குழந்தைகள்மீது வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள்.

இத்தகைய அப்பாவி பொது மக்கள் மீதான கொலைகள், கடத்தல்களை வன்மையாகக் கண்டிப்பதுடன் இதனை உடன் நிறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். இல்லையேன் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் கிளர்ச்சியின் மூலம் உங்கள் நடவடிக்கைகள் தடுக்கப்படும் என எச்சரிக்கின்றோம்.

இதேசமயம் எமது மக்களுக்கு நாம் கூறுவது என்னவென்றால், எமது உயிரையும் இருப்பையும் உறுதிப்படுத்த தற்போது பாதுகாப்பான தாயகப் பிரதேசங்களுக்குச் சென்றுதலைவன்பின்னால்அணி திரண்டு தமிழின அழிப்பினை மேற்கொள்ளும் கயவர் கூட்டத்தினை தாயகப் பிரதேசத்தில் இருந்து விரட்டி அடிப்போம் என உறுதி கொள்வோம் என்றுள்ளது. (கு)

# கைதான பொலிஸாரை விடுவிக்க நடவடிக்கை எடுக்குக

## வட.கிழக்கு ம.உ.செயலகத்திடம் கோரிக்கை

தமிழீழ விடுதலைப்புலிகளினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மூன்று பொலிடுஸாரையும் விடுதலைசெய்ய முயற்சி எடுக்குமாறு வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகமான நிசோருக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கைதான மூன்று பொலிஸாரினதும் உறவினர்கள் கடந்த வாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ராதிகா குமாரசுவாமியைச் சந்தித்துப் பேசியதையடுத்து இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச நடவடிக்கைகளில் நேரடியாகத் தலையீடுசெய்ய முடியாத போதும் மனிதாபிமான ரீதியில் இந்தக்கோரிக்கை முன்வைக்கப் பட்டிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார். (து)

# பிரச்சினைக்குத் தீர்வு காண்பது இரு தரப்பினரையும் பொறுத்தது



## நோர்வே தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எரிக் சொல்ஹெய்ம் வருகை தருவது முக்கியமானதாக இருந்தாலும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது முற்று முழுதாகவே இரு தரப்பையும் பொறுத்தது என்று நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்று முன்தினம் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துக்கூறுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், எரிக்சொல்ஹெய்மின் பயணத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதே இன்றைய எமது பயணத்தின் முக்கிய நோக்கமாகும்.

சுமார் 7 மாதங்களுக்குப் பின்னர் அவர் மேற்கொள்ளவுள்ள இந்தப் பயணம் மிக முக்கியமானதாகும். நோர்வே அமைச்சராக பதவியேற்ற பின்னர் அவர் இலங்கைக்கு மேற்கொள்கிற முதலாவது பயணம் இது. அவர் இலங்கையின் அமைதி முயற்சிகளில் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். எதிர்காலத்திலும் பணியாற்றுவார்.

கடந்த சில வாரங்களாக நடைபெற்று வரும் வன்முறைச் சம்பவங்களில் உயிரிழந்த, பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மற்றும் அரச படையினருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

இச்சம்பவம் நிறுத்தப்பட வேண்டும். தொடர்ந்தும் இப்படியே நடைபெற்றுக் கொண்டிருக்க அனுமதிக்கக்கூடாது.

அரசும் விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடிக்கவே நாம் கோருகிறோம். ஒப்பந்தத்தின் படி நடந்து கொண்டு அதனை செம்மையாக கடைப்பிடிக்கும் படி நாம் வேண்டுகோள் விடுக்கிறோம் .

கடந்த 13ஆம் திகதி மட்டக்களப்பு கண்காணிப்புக்குழு அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் பாரதூரமானது. அப்படியான சம்பவம் மீண்டும் நடைபெறக்கூடாது. அமைதி முயற்சிகளை முன்னெடுத்து செல்வதற்காக இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் உதவி செய்வதற்காகவே நாம் இங்கு அனுசரணையாளர்களாக அழைக்கப்பட்டுள்ளோம்.

ஆகவே ஏதாவது நடைபெற வேண்டுமானால் அது இரண்டு தரப்பையும் பொறுத்ததே தவிர எங்களை சார்ந்தது அல்ல. அமைதி முயற்சிகளை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்று அவர்கள் தான் கூற வேண்டும். அதற்கு எவ்வாறு உதவி செய்வது என்று நாம் ஆராயலாம். சொல் ஹெய்மின் பயணத்தைப் பொறுத்த வரை அவரது வருகையில் பாரிய எதிர் பார்ப்பை ஏற்படுத்தத் தேவையில்லை. அவர் இங்கு வருவது இரண்டு தரப்பினருடனும் திறந்த மனதுடன் பேச்சு நடத்துவதற்காகத் தான்.

அரசு தரப்பு கருத்தையோ அல்லது புலிகளின் தரப்பு கருத்தையோ நாம் கூற முடியாது. தற்போதைய பிரச்சினையைப் புரிந்து கொண்டு அதனை எவ்வாறு தீர்ப்பது என்று அரசும் விடுதலைப் புலிகளும் முன்மொழிவுகளை தந்தால் அவை தொடர்பில் எவ்வாறு உதவிசெய்து அமைதி முயற்சிகளை முன்னெடுப்பது என்று சிந்திக்கலாம். தரப்பின் பிரதிநிதியாகவும் நின்று நாங்கள் ஊகங்களை வெளியிட முடியாது.

இரு தரப்புக்கும் உரிய விடயங்களை எடுத்துக்கூறி அமைதி முயற்சிகளை முன்னெடுத்துச்செல்ல உதவுவதற்கு எமக்கு கிடைத்துள்ள நல்ல சந்தர்ப்பம் இது. விடுதலைப் புலிகளுடன் சந்திப்புக்களை மேற்கொள்வதைப் போலவே அரச தரப்பினருடனும் நான் அடிக்கடி சந்திப்புக்களை மேற்கொள்வது உண்டு. அந்த வகையில் அரச தரப்பினரையும் சந்தித்துப் பேசியுள்ளேன். யுத்த நிறுத்த ஒப்பந்தம் பாரதூரமான நெருக்கடியில் உள்ளது. ஆனால் நாம் நம்பிக் கையை கைவிட்டு விடக்கூடாது என்றார். (து)

## பயிற்சிக்கு தயாராகும் கிளி.வர்த்தக சமூகம்!









(கிளிநொச்சி)

நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள இராணுவ நெருக்கடிகளை கருத்தில் கொண்டு கிளிநொச்சி வர்த்தக சங்கத்தினர் இராணுவப் பயிற்சி எடுக்க தீர்மானித்துள்ளனர்.

இதற்கிடையில் கடந்த திங்கட்கிழமை 3 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் கிளிநொச்சி பிரதேசத்திற்கு உட்பட்ட அனைத்து வர்த்தக சங்க உறுப்பினர்களுக்குமான சமகால அரசியல் கருத்தரங்கு நடைபெற்றது.

இதன் போது கடந்த கால போராட்ட வரலாறுகள் பற்றியும், போராட்டத்தின் முக்கிய திருப்புமுனைகள் அண்மைக்காலமாக நடைபெற்று வருகின்ற நெருக்கடி நிலைமைகள் தொடர்பாகவும் தூயவன் அரசறிவியல் கல்லூரிப் பொறுப்பாளர் அ.பார்த்தீபன் வர்த்தக சங்க உறுப்பினர்களுக்கு கருத்துக்களை வெளிப்படுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன், இளையோர் மேம்பாட்டுப் பேரவைப் பணிப்பாளர் நரேன், கிளிநொச்சி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் போர்ப்பிரியன், கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சு.பசுபதிப்பிள்ளை, யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சொலமன் சூ.சிறில் ஆகியோர் கலந்து கொண்ட னர்.

வர்த்தக சங்கத்தின் உறுப்பினர்களாக வர்த்தக சங்கத் தலைவர், செயலாளர் உட்பட அனைத்து வர்த்தக நிலைய உரிமையாளர்கள், ஊழியர்கள், சந்தை வர்த்தக சங்கத் தலைவர்கள், உரிமையாளர்கள், ஊழியர்கள் எனப் பெருந்தொகையானோர் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றி தமது தீர்மானங்களை வெளிப்படுத்தினர். (கு)

## தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள்– புலிகள் கொக்கட்டிச்சோலையில் சந்திப்பு


(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் கொக்கட்டிச்சோலை மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான பொறுப்பாளர் மனோஜ் தலைமையில் இடம் பெற்ற இக்கூட்டத்தில், 2006ஆம் ஆண்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் முன்னெடுக்கவுள்ள அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் ஆரா யப்பட்டன.

இச்சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட துறை சார் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்கினார்கள். மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தயாமோகன், துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சீராளன், மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளார் தமிழ்நிலவு, தமிழீழ கல்விக்கழக மாவட்ட பொறுப்பாளர் விமல்ராஜ், மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ சுகாதார சேவை பொறுப்பாளர் செல்வக்குமார், மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறை பொறுப்பாளர் மேதாஸ், மட்டக்களப்பு மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் ஈழமாறன், ஊரக மேம்பாட்டு பேரவை இணைப்பாளர் சி.அரிகரன், மட்டக்களப்பு மாவட்ட நிர்வாக சேவை பொறுப்பாளர் தங்கையா, மாவட்ட கடல் வளங்கள் மீன்பிடித்துறைப் பொறுப்பாளர் சக்தி ஆகியோரும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களும் கலந்துகொண்டனர். இதன் போது அந்தந்த நிறுவனங்கள் 2006ஆம் ஆண்டில் முன்னெடுக்கவுள்ள அபிவிருத்தி தொடர்பான திட்ட வரைபுகள் குறித்த ஆவணங்கள் திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான பொறுப்பாளரிடம் கையளிக்கப்பட்டன.

இதனையடுத்து அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளின் கருத்துரைகளும் இடம் பெற்றது. (து)







வடக்கு-கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய புலோலி கொத்தணி குடும்ப முன்பள்ளிகளின் விளையாட்டு விழாவை தென்புலோலி புற்றளை மகாவித்தியாலய அதிபர் ஆர்.அனந்தீஸ்வரன் மங்கள விளக்கேற்றி ஆரம்பிப்பதையும், முன்பள்ளி ஆசிரியைகள் முன்பள்ளிக் கொடியை ஏற்றுவதையும், பருத்தித்துறை பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி ஆர்.தவலட்சுமிதேவி, பிரதம விருந்தினரான பருத்தித்துறை பிரதேச முன்பள்ளி ஆசிரியர் சங்க ஆலோசகர் ஏ.என்.எஸ்.திருச்செல்வம் ஆகியோர் இருப்பதையும், சிறப்பு விருந்தினரான பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிவநேசன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-பரு.நிருபர்)

## இன்று ஒரு தகவல்

# எது சொந்தம்?

அவசரமாக ஓடிப்போய் ஒரு பஸ்ஸில் ஏறி...உள்ளே ஒரு இடம்பிடித்து உட்கார்ந்தார் ஒருவர். அது ஒரு டவுன் பஸ். நடத்துனர் பின்னால் அமர்ந்திருந்தார். அதனால் எழுந்துபோய் அவரிடம் பணம் கொடுத்து ஒரு டிக்கெட் வாங்கிக் கொண்டு திரும்பிவந்தார். ஏற்கனவே இவர் உட்கார்ந்திருந்த இடத்தில் வேறு ஒருவர் உட்கார வந்தார். "சார்... சார் அது என் இடம்" என்று சொல்லிக் கொண்டே ஓடிப்போய் இவர் தனது பழைய இடத்தை மீண்டும பிடித்து உட்கார்ந்து கொண்டார்.

இது நாம் தினசரி காணும் ஒரு காட்சிதான். பத்து நிமிட பிரயாணத்திற்குள்ளேயே அந்த இடத்தை நமக்குச் சொந்தம் என்று நினைத்துவிடுகிறோம். பலநாள் வாழ வேண்டிய வாழ்க்கை இது. அதனால் பார்ப்பதையெல்லாம் நமக்குச் சொந்தம் என்று நினைக்கிறான் பாமர மனிதன்.

ஒரு பெரிய துறவி... அவர் ஒரு அரண்மனைக்கு வந்து ராஜாவைப் பார்த்தார். என்ன வேண்டும்? என்று கேட்டார் ராஜா. "பயணிகள் தங்கும் இந்த இடத்தில் தூங்குவதற்கு கொஞ்ச இடம் வேண்டும்"என்றார் துறவி. ராஜாவுக்குக் கோபம் வந்துவிட்டது, "இது எனது அரண்மனை. இது பயணிகள் தங்கும் விடுதி இல்லை"என்றார் ராஜா. அந்தத் துறவி இப்போது ராஜாவைப் பார்த்துக் கேட்டார். "உங்களுக்கு முன்னால் இது யாருக்குச் சொந்தம்?" என்றார். "இது என் தந்தையினுடையது"என்றார்.

"அவர் இப்போது எங்கே?"என்றார். "அவர் இப்போது இல்லை... இறந்துவிட்டார்"என்றார். "சரி... அவருக்கு முன்பு இது யாருக்குச் சொந்தம்?" என்றார். "அவருக்கு முன்னால் இது என் பாட்டனாருக்குச் சொந்தம்!" என்றார்."அவர் எங்கே?" என்று கேட்டார். "அவரும் இப்போது இல்லை" என்றார். "பார்த்தாயா? அவர்கள் எல்லாம் இங்கே கொஞ்சக் காலம் தங்கியிருந்துவிட்டுப் போயிருக்கிறார்கள்... அவ்வளவு தான். அப்படியிருக்கும் போது இது பயணிகள் தங்கும் இடமில்லாமல் வேறு என்ன?"என்று கேட்டார் துறவி. ராஜா யோசித்தார். புறப்படுவதற்கு முன்னால் கொஞ்சக் காலம் தங்கிவிட்டுப் போகும் இடம்தான் இதுவென்பதைப் புரிந்துகொண்டார்.

இப்படித்தான் இன்று பலபேர் சொந்தமில்லாததை யெல்லாம் சொந்தம் என்று நினைத்துக் கொண்டு சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஒரு கதை சொல்லியிருகிறார். அது என்னவென்றால் கடவுள் இரண்டு சமயங்களில் சிரிக்கிறாராம். ஒரு சமயம் எப்படியென்றால் ஒரு மருத்துவர் ஒரு நோயாளியிடம் "பயப்படாதே நான் உன்னைக் காப்பாற்றி வருகிறேன்" என்று கூறும்போது சிரிப்பாராம்.

"நாம் இந்த ஆளின் வாழ்க்கையை முடிக்கத் திட்டமிடுகிறோம்... இவன் அவனைக் காப்பாற்ற நினைக்கிறானே" என்று நினைத்து சிரிப்பாராம்.

கடவுளுக்குச் சிரிப்பு வரும் இன்னுமொரு சந்தர்ப்பம் என்னவென்றால் அண்ணனும் தம்பியும், அப்பா விட்டு விட்டுப் போன நிலத்தை இரண்டாகப் பிரித்து நடுவில் கோடு போட்டு கோட்டுக்கு இந்தப் பக்கம் என்னுடையது. அந்தப் பக்கம் உன்னுடையது என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது கடவுளுக்கு சிரிப்பு வருமாம். அவர் நினைப்பாராம். இந்த இடம் முழுதும் நம்முடையது அப்படி இருக்கும்போது இந்த இரண்டுபேரும் என்னுடையது. உன்னுடையது என்று உரிமை கொண்டாடுகிறார்களே" என்று நினைத்து சிரிப்பாராம்.

யோசித்துப் பார்த்தால் நியாயமாகத்தான் படுகிறது. இருப்பவற்றையெல்லாம் சொந்தமாக்கிக் கொண்டு அதைப் பாதுகாப்பது எப்படி என்பதிலேயே நமது காலம் கழிந்து விடுகிறது.

நமது ஆசாமி ஒருவன் ஊரில்... பெரிதாக,ஒரு வீடு கட்டினான். ஒருநாள் அவன் பட்டணத்திற்கு வந்தான். திடீரென்று புயல்...மழை... வெள்ளம் என்று ஊரிலிருந்து செய்தி வந்தது. "உன்னுடைய வீடு வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போய்விட்டது" என்று செய்தி வந்தது. இவன் கவலைப்படவே இல்லை. "இருக்கவே இருக்காது... எனது வீட்டுக்கு எந்த ஆபத்தும் வராது... வந்திருக்காது"என்றான்."எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறாய்?" என்று கேட்டார்கள் அயலவர்கள். "வரும்போதே அதைப் பத்திரமாகப் பூட்டிவிட்டுத்தான் வந்திருக்கிறேன். சாவி கூட இதோ என் சட்டைப்பையில் தான் இருக்கிறது" என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அரச பயங்கரவாதம் தொடருமானால் எமது போராட்டமும் தொடரும்

## தமிழ்க்கட்சிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழர் தாயகமான இலங்கையின் வடக்கு-கிழக்கில் அரசாங்கத்தின் அரச பயங்கரவாதச் செயல்கள் முடிவுக்கு வரும் வரையில் பாராளுமன்றுக்கு உள்ளேயும் வெளியேயும் தமது எதிர்ப்புப் பிரசாரம் தொடர்ந்து நடைபெறும் என்று இலங்கையின் அனைத்துத் தமிழ்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளும் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இந்த சந்திப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தலைமை வகித்தார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் பிரதித் தலைவர் ஆர்.யோகராஜன், முன்னாள் அமைச்சர் முத்து சிவலிங்கம்,மலையக மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் பெ. சந்திரசேகரன் ,மேலக மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் ஆகியோரும் இச் சந்திப்பில் பங்கேற்றனர்.

ஊடகவியலாளர்களிடம் தமிழ்க் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறியதாவது,

வடக்கு-கிழக்கில் ஸ்ரீலங்கா அரச படைகளின் வன்முறைகள் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளன. கடந்த சில மாதங்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் 50க்கும் மேற்பட்ட பொது மக்கள் கடத்தப்பட்டுள்ளனர்.

கடந்த டிசம்பர் 1 முதல் ஜனவரி 12 ஆம் திகதி வரை அரச படையினர் மற்றும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் குழுக்களினால் யாழ்ப்பாணத்தில் மட்டும் 31 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதர மாவட்டங்களில் மொத்தம் 42பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு -கிழக்கில் அரச படைகள் மேற்கொண்டு வரும் இந்த அரச பயங்கரவாதச் செயல்கள் முடிவுக்கு வரும்வரை பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் எமது போராட்டம் தொடரும். யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருந்த போதும் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி தமிழ்மக்களைக் காரணம் ஏதுமின்றி கைதுசெய்து துன்புறுத்துகிறது இராணுவம். தமிழ் மக்களின் பல கடத்தல்களை தம்முடன் சேர்ந்தியங்கும் குழுக்களின் துணையுடன் இராணுவம் மேற்கொண்டு வருகிறது.

கொழும்பில் இதர தென்னிலங்கைப் பகுதிகளிலும் இரவு நேரங்களில் அப்பாவி தமிழ் மக்கள் பெருந்தொகையில் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களுக்கு விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்படும் அவலம் நீடிக்கிறது.

தமிழ் மக்களின் மீதான இந்த வன்முறைகளைத் தடுத்து நிறுத்த ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் தவறிவிட்டன. தனது அரசியல் பிழைப்புக்காக தமிழர்களுக்கு எதிரான ஜாதிக ஹெல உறுமய,ஜே.வி.பி. கட்சியினருடன் கூட்டு சேர்ந்திருக்கும் ஜனாதிபதி ஒருவரிடம் தமிழ் மக்கள் நீதியை எதிர்பார்க்க முடியாது.

அமைதி முயற்சிகள் முடங்கிப் போய் நிற்கின்றன. இராணுவத்தினது இந்த வன்முறைகளால் அமைதி முயற்சிகளின் மீது தமிழ் மக்கள் நம்பிக் கையிழந்துவிட்டனர் என்றனர். (கு-4)

# இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்க முடியாது

(கொழும்பு)

இலங்கை இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுவினரைக் கைதுசெய்ய இராணுவம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விடுத்துள்ள வேண்டுகோளை பாதுகாப்பு அதிகாரிகள் நிராகரித்துள்ளனர்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விடுதலைப் புலிகளின் கோரிக்கையை எங்களூடாக நிறைவேற்றிக் கொள்வதற்கு முயல்கின்றனர் என்று மூத்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை யுத்த நிறுத்த கண்காணிப் புக் குழுவின் மட்டக்களப்பு அலுவலகத்தில் நடைபெற்ற குண்டுவெடிப்பினையடுத்து வெளிநாட்டு ஊடகத் துக்கு நேர்காணல் அளித்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஓலப் டொடிர் கருணா இருக்கும் இடத்தை இராணுவத் தினர் அறிவார்கள் என்றும் அவர்களின் ஆயுதங்களைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் கூறியிருந்தார்.

இதற்கிடையில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தொடரும் வன்முறைகளை நிறுத்த அரசினாலும் தமிழீழ விடுதலைப் புலிகளினாலும் மட்டுமே முடியுமென யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

அத்துடன் இந்த வன்முறைகள் தொடர்ந்தும் இடம்பெறுமாயின் மீண்டும் ஓர் யுத்தம் வெடிக்கும் என்றும் கண்காணிப்புக்கழு எச்சரித்துள்ளது. (க)

# வடக்கு-கிழக்கு பிரச்சினை குறித்து நேரடி விவாதத்துக்கு தயாரா!

## ரணிலுக்கு சவால் விடுகிறார் விமல் வீரவன்ஸ

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்சினை தொடர்பாக நேரடித் தொலைக்காட்சி விவாதத்துக்கு வருமாறு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரனில் விக்கிரமசிங்கவுக்கு ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் விமல் வீரவன்ஸ கூறுகையில்,

ஜே.வி.பி. மீது தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்களை சுமத்துவதை விடுத்து நேரடியாகத் தொலைக் காட்சி விவாதத்துக்கு ரணில் வர வேண்டும்.

எமது சவாலுக்கு முகம் கொடுத்த ரணிலுக்குத் தைரியம் இல்லாவிடில் அக்கட்சியின் அரசியல் சபையின் தலைவர் நிலையில் உள்ள எந்தவொரு நபருடனும் பகிரங்க விவாதத்தில் ஈடுபடுவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். இதற்கும் ரணிலுக்குத் துணிவில்லாவிடில் இனிமேலும் வெறும் கூக்குரல் எழுப்பாமல் இருக்க வேண்டும்.

தனது தலைமைப் பதவிக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் அதனைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தற்போது நாடு முழுவதும் ரணில் விக்கிரமசிங்க சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு வருகிறார்.

பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ள அவருக்கு இப்போது மகிழ்ச்சியளிப்பது பாதுகாப்புப் படையினர் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல்களை நடத்துவதேயாகும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர்தான் பாதுகாப்புப் படையின் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர் என்றும் விமல் வீரவன்ஸ மேலும் தெரிவித்தார். (இ-4,8)

# கட்டட வேலைகள் மந்தகதியில்!

(மருதங்கேணி)

வடமராட்சிப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் வீடுகள் அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ள போதும் மணல் இல்லாமையால் கட்டடப் பணிகள் மந்தகதியிலேயே நடைபெற்று வருகின்றது.

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் 13அரச சார்பற்ற நிறுவனங்கள் 3ஆயிரம் வீடுகள் வரை கட்டி கொடுக்க முன்வந்து, வேலைகள் ஆரம்பித்தும் மிகுதி வேலைகளை மணல் இல்லாத காரணத்தால் முடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்தில் கற்கோவளம், புனித நகர், தும்பளை,முனை, இன்பருட்டி, சக்கோட்டை, பொலிகண்டி, ஆதிகோவிலடி, தொண்டைமானாறு ஆகிய பகுதிகளிலேயே வீடுகள் கட்டி முடிக்கப்படாமல் உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (க-35)

## திருக்குறள் மனனப் போட்டி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில் திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு அடுத்த மாதம் 12ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் திருக்குறள் மனனப் போட்டி நடாத்தப்படவுள்ளது.

அதற்கான விண்ணப்பப்படிவமும், விதிகளு[illegible]சகல பாடசாலைகளுக்கும் அ[illegible]ப்பப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை இம் மாதம் 31ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கும்படி சைவபரிபாலனசபை கேட்டுள்ளது. (கு)

# சமய நிகழ்வுகள் இறுக்கமாக நிர்ணயிக்கப்பட வேண்டும்

## இந்துசமயப் பேரவைக் கூட்டத்தில் பேராசிரியர் கோபாலகிருஷ்ணா ஐயர்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய பேரவை-தமது பணிகளை விரிவுபடுத்துவதற்கு அனைத்து இந்து நிறுவனங்களும், இந்துசமய அபிமானிகளும் தமது மனப்பூர்வமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என முன்னாள் யாழ்.பல்கலைக் கழக கலைப் பீடாதிபதியும் இந்து நாகரிகத் துறைப் பேராசிரியருமான பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண இந்து சமயப் பேரவைப் பொதுக் கூட்டத்தில் தொடக்கவுரை ஆற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; எமது நாட்டில் வெளியிடப்படும் பஞ்சாங்கங்கள் ஆற்றிய பணிகளை யாம் மறந்துவிடவில்லை.

எனினும் அண்மைக் கால[illegible]தில் பஞ்சாங்கம் சம்பந்தமாக ஏற்பட்ட சர்ச்சை எமக்கு மிகுந்த மனவேதனையை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வகையில் இனிவரும் காலங்களில் இதுபோன்ற நிலை ஏற்படாதிருக்கும் வகையில் செயற்பட வேண்டுமென சம்பந்தப்பட்டவர்களை மிகுந்த அன்புரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்.

முகூர்த்தம், திதி, நட்சத்திர நிர்ணயங்களை நுணுக்கமாக ஆராய்ந்து முடிவுசெய்ய வேண்டும். இந்த வகையில் செய்யப்படும் நிர்ணயங்கள் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட வேண்டியதும் இப்போது அவசியமாகியுள்ளது.

அண்மையில் திருக்கார்த்திகை, திருவெம்பாவைதின நிர்ணயத்தால் ஏற்பட்ட முரண்பாடான தன்மை உலகிலுள்ள இந்துக்களைத் தத்தளிக்க வைத்துவிட்டது. இது சம்பந்தமாக சில செயற்பாடுகளையும், கருத்தரங்குகளையும் நடத்தினேன். ஆனால் முழுமையாக வெளிவராத காரணத்தால் பூரண பலனைத் தரவில்லை.

இனிவரும் காலங்களில் இந்து சமயப் பேரவை இப்பணிகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இக்கூட்டத்தில் நடப்புப்பேரவை ஆண்டு உத்தியோகத்தர்கள் தெரிவு இடம்பெற்றது. இவற்றில் தலைவராக பேராசிரியர் சி.க.சிற்றம்பலமும், கௌரவ செயலாளராக சி.சக்திகிரிவனும், பொருளாளராக த.சற்குணராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

உபதலைவர்களாக பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணன் க. இ.குமாரசாமி, ந.தெய்வேந்திரன் ஆகியோர் தெரிவாகினர். இவற்றோடு உபசெயலாளர்களும், நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்துசமயப் பேரவை தனது பணிகளை விரிவுபடுத்துவதற்கு அனைத்து இந்து நிறுவனங்களையும் இந்துசமய அபிமானிகளையும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டுள்ளது.

மதம் சம்பந்தமான கிரியைகளில் எழும் சந்தேகங்களைத் தெரிந்துகொள்வதற்கு இந்து சமயப்பேரவையில் மாதாமாதம் பௌர்ணமி தினங்களில் கருத்து ரைகளையும் அவைபற்றிய விரிவான கூட்டத்தையும் நடத்தவுள்ளது. (சு-8)

# வீடமைப்பு அபிவிருத்தி வழிமுறைகள் குறித்து நிரந்தர கொள்கை தயாரிக்கப்படும்

(கொழும்பு)

நாட்டின் வீடமைப்பு அபிவிருத்தி வழிமுறைகள் சம்பந்தமாக நிரந்தரக் கொள்கையொன்று தயாரிக்கப்படவுள்ளது.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் பேரியல் அஷ்ரப் இது பற்றித் தெரிவிக்கையில்;

எதிர்காலத்தில் எந்தவொரு அரசாங்கமும் பதவிக்கு வந்தாலும் வீடமைப்பு அபிவிருத்தி சம்பந்தமாக கடைப்பிடிக்கவேண்டிய பொருத்தமான வழிமுறைகள் இந்தக் கொள்கைப் பிரகடனத்தில் இடம்பெற்றிருக்கும் .

இந்தக் கொள்கைப் பிரகடனத்தில் குறைந்த செலவில் வீடுகளை நிர்மாணிக்கும் வழிமுறைகளுக்கு முதலிடம் அளிக்கப்படும்.

இதேசமயம், வறிய குடும்பங்கள் வாழும் மாவட்டங்களுக்கு முன்னுரிமையளித்து மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் வீடமைப்புத்திட்டங்கள் தற்சமயம் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

அடுத்த 5 வருடத்தில் 17ஆயிரம் கிராம சேவை அதிகாரிகள் பிரிவுகளில் வீடுகளை அமைப்பது அமைச்சின் முக்கிய நோக்கம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (சு-7)

# இலஞ்சம் பெற்ற இரு பொலிஸ் அதிகாரிகள் கைது

(கொழும்பு)

4 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்ற பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆகிய இருவரை இலஞ்ச ஊழல் மோசடி குற்றப்புலனாய்வு ஆணைக் குழு கைதுசெய்துள்ளது.

அமுங்கல்ல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று ஆணைக்குழுவின் பணிப்பாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான நெவில் குருகே தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் இரண்டு பேரும் 2004ஆம் ஆண்டு அம்பலாங்கொட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய போது கைதுசெய்யப்பட்ட ஒருவரை விடுதலை செய்வதற்கு 4ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றுள்ளனர்.

குறிப்பிடப்பட்ட நபரின் மனைவி இது தொடர்பாக இலஞ்ச ஊழல் மோசடி புலனாய்வு ஆணைக் குழுவிற்கு முறைப்பாடு செய்துள்ளார்.

அதன்படி, மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறிப்பிடப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் 5ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகக் கோரி அதில் 4 ஆயிரம் ரூபாவை பெற்றுள்ளமை தெரியவந்துள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் தெரிவித்தார். (சு-7)

# கும்பாபிஷேகம் ஒத்திவைப்பு

காரைநகர் தோப்புக்காடு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் படையினரின் கெடுபிடியால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இக்கிராமத்தில் சுமார் 20 வருடங்களுக்குப் பின்னரே மக்கள் மீளக்குடியமர்ந்தனர். சேதமடைந்திருந்த இவ்வாலயம் இவ்வூர் மக்களால் 30 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது.

ஆலய பரிபாலன சபையினர் அடுத்த மாதம் 4ஆம் திகதி மகா கும்பாபிஷேகத்தை நடத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டனர் இதற்கான இயந்திர பூசையும் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் கடற்படையினர் இக் கிராமத்தைச் சுற்றி காவலரண்களை ஏற்படுத்தியுள்ளனர். கடந்த சில நாட்களாக கடற்படையினர் சோதனை நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இதனால் இக்கிராம மக்கள் இடம்பெயர்ந்து பல பிரதேசங்களுக்குச் சென்றுகொண்டிருக்கின்றனர். இதே சமயம் ஆலய பரிபாலனசபையினர் இயந்திர பூசையை நிறுத்தியதுடன் மகா கும்பாபிஷேகத்தையும் ஒத்திவைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சு-8)

# நிழலைக் கண்டு அஞ்சிய சிப்பாய் சகபாடியை சுட்டுத் தள்ளினார்

(கொழும்பு)

கடற்படை சிப்பாய் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மற்றொரு சிப்பாய் படுகாயமடைந்துள்ளார்.

கடற்படையின் வெலிசறை கடற்படை முகாமில் வெடிபொருட்கள் பிரிவிற்குப் பாதுகாப்பாக இருக்கும் சிப்பாய் மீது அதே முகாமில் பணியாற்றும் மற்றொரு சிப்பாய் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

இதில் படுகாயமடைந்த கடற்படை சிப்பாய் ராகமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த சிப்பாய் இருட்டில் வரும்போது சந்தேகத்திற்கிடமான ஒருவரே வருவதாக கருதிய மற்றொரு சிப்பாய் அவர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக பதில் இராணுவ ஊடகப் பேச்சாளரான அத்துல ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தையடுத்து இராணுவத்தினரும் கடற்படையினரும் இணைந்து முகாமை சுற்றித் தீவிர தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இராணுவமும் கந்தானைப் பொலிஸாரும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கு)

# அத்துளு குடிநீரினை சுத்திகரிக்க இயந்திரம்

கரவெட்டி அத்துளு குடிநீரினை சுத்திகரித்து வழங்க நவீன இயந்திரம் ஒன்று பொருத்தப்படவுள்ளது. இதற்காகச் சுமார் 650இலட்ரூபா பெறுமதியான பாரிய இயந்திரம் ஒன்றினையும், இரசாயன மருந்துகள் கொண்ட களஞ்சியம் ஒன்றினையும் மின்சாரம் இல்லாதவேளை இயக்குவதற்கான மின்பிறப்பாக்கி ஒன்றினையும் குவைத் அரசு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

தேசத்தை கட்டியெழுப்புதற்கும் அபிவிருத்திக்குமான அமைச்சினால் மேற்படி 650 இலட்சம் பெறுமதியான உபகரணங்கள் பொறுப்பேற்கப்பட்டு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கான முயற்சி நடைபெறுகிறது.

மேற்படி இயந்திரத்தினை நிறுத்துவதற்கான அடித்தளம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா தைப்பொங்கல் தினத்தன்று பி.சி.பொன்னம்பலம் தலைமையில் உறுப்பினர் கி.சிவநேசன் நாட்டினார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு-கிழக்கு மாகாண பிரதி சுகாதாரசேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி கேதீஸ்வரன், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைச் செயலாளர் வே.குலநாயகம், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் பொறியியலாளர் எஸ்.செல்வகுமார் உட்படப்பலர் கலந்துகொண்டனர்.

மேற்படி இயந்திரம் மணிக்கு 30,000 லீற்றர் நீரை சுத்திகரிக்கும் செயற்றிறன் கொண்டதெனவும், இவ்வியந்திரம் கிடைத்ததனால் 1000 குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீரினை வழங்க முடியுமெனவும் தெரிகிறது எனவும் இவ்வியந்திரம் உவர்நீரையும் நன்னீராக்கும் திறமைகொண்டதெனவும், தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அபிவிருத்திக்குமான அமைச்சின் பிரதி திட்டப்பணிப்பாளர் சூரியபிள்ளை பாலச்சந்திரன் தெரிவித்தார்.

அத்துளு குடிநீரினை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் கிராம மக்களுக்கு நாளாந்தம் 1மணித்தியால நேரம் குழாய் மூலம் விநியோகித்து வருவதாகவும் அதற்காக மாதக் கட்டணமாக ஒரு நீர்க்கம்பத்திற்கு ரூ476.10 வீதம் அறவிடப்பட்டு வருவதாகவும் கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர். (து-10)

# சுற்றாடல் சட்ட அமுலாக்கல் குழுக்கூட்டம்

மாவட்ட சுற்றாடல் சட்ட அமுலாக்கல் குழுக்கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் கடித மூலம் அறிவித்துள்ளார். சகல உள்ளூராட்சி மன்ற செயலாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-47)

# மீன்பிடி வலைகள் வழங்கும் நிகழ்வு

(கிளிநொச்சி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு கடற்தொழிலாளர்களுக்கு, கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தால் மீன்பிடி வலைகள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதேவேளை 200 வெளி இணைப்பு இயந்திரங்கள் 200 கண்ணாடி இழைப்படகுகள் ஏற்கனவே மேற்படி தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## மூவர்ண நாட்காட்டி

(பொன்னாலை)

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியின் பவள விழாவை முன்னிட்டு மூவர்ண நாட்காட்டிகள் வெளியிடப்பட்டுள்ளன.

அறுபத்து மூவரினதும் குருபூசைகள் உள்ளிட்ட முக்கிய விவரங்களை உள்ளடக்கியதாக வெளியாகியுள்ள இந்த நாட்காட்டியை கல்லூரி அதிபருடன் தொடர்புகொண்டு இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-49)

## அவசர கால சட்ட நீடிப்பு விவாதம் இன்று

(கொழும்பு)

அவசரகால நிலையை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பதை அங்கீகரிக்கும் பிரேரணை இன்று நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கப்படவுள்ளது.

இந்நிலையில், தமிழ் மக்கள் மீதான மனிதவுரிமை மீறல்களை இலங்கையின் ஆயுத படையினர் மேற்கொள்வதற்கு உதவும் இந்த அவசரகால நிலை நீடிப்பை எதிர்த்து வாதிடுவது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளதாக தெரியவருகின்றது. (க)

## உடனடி உதவியாக 25 ஆயிரம் ரூபா

(நல்லூர்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாயில் நடந்த சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்திற்கு கொழும்பு சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவின் தளபதி டாக்டர் ஜே.ஜி.ஜெயதிலகா இருபத்தையாயிரம் ரூபாவை அக்குடும்பத்தினரின் உடனடி உதவியாக சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் யாழ்.மாவட்ட ஆணையாளர் மூலமாக கடந்த திங்கட்கிழமை அனுப்பியுள்ளார். (து-134)

## விண்ணப்பம் கோரல்

(நல்லூர்)

மொறட்டவ பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்பவியல் நிறுவனத்தினால் 2006, 2007 கல்வியாண்டுக்கென மாணவர்களை அனுமதிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழி மூலமாக நடாத்தப்படவுள்ள ஒன்பது தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்காகவே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (து-134)

## இணைப்பாளராக நியமனம்

(நல்லூர்).

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பாளராக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட கிளையின் உப தலைவர் கு.பாலகிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கொழும்பு தேசிய தலைமையகக் கிளையின் ஆளுநர் சபை உறுப்பினரான இவர் வடக்கு - கிழக்கு கிராம அபிவிருத்தி திணைக்கள உதவிப் பணிப்பாளராகவும், யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி அதிகாரியாகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (து-134)

## பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண கைத்தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம் பிரதேச செயலகர் ஊடாக ஒரு மாத காலத்துக்கான உணவு பதப்படுத்தல் பயிற்சி நெறியையும் ஆறுமாத காலத்துக்கான தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகளையும் ஆரம்பிக்கவிருக்கின்றது.

இப் பயிற்சி நெறிகளில் சேர்ந்து பயிற்சி பெற விரும்புவோர் தமது சுய விபரங்களுடன் பிரதேச செயலாளர் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு இம் மாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

# ஆயுதக் கப்பலைப் பாதுகாக்கவே கடற்படைமீது புலிகள் தாக்குதல்

(கொழும்பு)

தமது ஆயுதக் கப்பலைப் பாதுகாக்கவே கடற்படையின் டோரா படகு மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியிருக்கக் கூடும் என்று கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் புதிதாக பெருமளவு ஆயுதங்களை வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்திருக்கலாம் என்று சந்தேகிப்பதாக இராணுவ நடவடிக்கைப் பணிப்பாளர் அத்துல ஜயவர்த்தன கூறியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தியை வெளியிட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி கடற்படையினரின் டோராப் படகின் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம் படையினரை திசை திருப்பி இந்த ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டிருக்கக் கூடும் என்று தாம் சந்தேகிப்பதாகவும் பிரிகேடியர் அத்துல ஜயவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவிலிருந்து 250 கிலோ மீற்றர் தொலைவில் கப்பல் ஒன்றின் நடமாட்டம் பற்றிய தகவல்களும் புலனாய்வுப் பிரிவின் மூலம் அறிந்துகொள்ளப்பட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் கூறுவதாக அந்தப் பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# க.கா. குழுவின் பணிகள் திருமலையில் நிறுத்தம் கவலைக்குரிய விடயமென்கிறது ஐ.தே.க

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் திருகோணமலைப் பகுதிக்கான தமது நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டுள்ளமை கவலைக்குரிய விடயமென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிக்கின்றது.

நாளாந்தம், படையினரும், பொது மக்களும் கொல்லப்படுகின்றார்கள். இது நாட்டின் பாதுகாப்பிற்கு குந்தகத்தை ஏற்படுத்தியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தை ஆரம்பித்திருந்தால் இவ்வாறான பிரச்சினைகளை சுமூகமாகப் பேசித் தீர்த்துக்கொள்ள முடியுமென்று குறிப்பிட்டுள்ள பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க போர் நிறுத்த ஒப்பந்தம் முறியாமலிருக்க உடனடியாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமெனவும் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கண்காணிப்புக் குழுவினர் தமது கடமைகளை மேற்கொள்ள சகல ஏற்பாடுகளையும் செய்து கொடுக்கப்படுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-9)

# ஆலையடி வேம்பில் சடலம் மீட்பு! அக்கரைப்பற்றில் பதற்றம்!!

## தமிழ் மக்கள் அச்சம் காரணமாக வெளியேற்றம்

(திருக்கோவில்)

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில், ஆலையடிவேம்பு, பொத்துவில் போன்ற தமிழ்ப் பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அக்கரைப்பற்றில் படுகொலை செய்யப்பட்ட இரண்டு மேசன் தொழிலாளர்களின் படுகொலையைக் கண்டித்தே இக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் ரயர்களைப் போட்டு எரித்து போக்குவரத்தினைத் தடைசெய்ததால் அக்கரைப்பற்று, அம்பாறை- பொத்துவில் போன்ற பகுதிகளுக்கான போக்குவரத்துத் தடைப்பட்டன.

அதேவேளை வங்கிகள், அரச நிறுவனங்களின் அலுவலகங்கள் என்பன மூடப்பட்டதுடன் நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

இவைதவிர அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த அகமது லெப்பை அப்துல் வாஹித் என்பவர் அடையாளம் தெரியாத குழுவினரால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தையடுத்து அக்கரைப்பற்று பிரதேசத்தில் தற்போது பதற்ற நிலை காணப்படுகின்றது.

அப்துல் வாஹித்துடன் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த நாகூர் தம்பி ஆதம்லெப்பை தாக்குதலிருந்து தப்பி, தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தங்களை அடையாளம் தெரியாத ஐந்துபேர் கொண்ட குழுவினர் வாகனத்தில் கடத்திச் சென்று தாக்கியதாக அவர் தெரிவித்துள்ளார்.

அச்சமயம் கொல்லப்பட்டவரின் சடலம் தமிழ்ப் பிரதேசமான ஆலையடி வேம்பிலுள்ள வயல் வெளியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து தமிழ்க் குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

அப்போது முஸ்லிம் பிரதேசங்கள் ஊடாகச் சென்ற சில தமிழர்கள் தாக்கப்பட்டுள்ளனர். எல்லைப் புறங்களிலிருந்து 100க்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் தற்போது இடம்பெயர்ந்துள்ளன.

முஸ்லிம் பிரதேசங்களில் வியாபார நிலையங்கள், அலுவலகங்கள் அனைத்தும் நேற்றுமுன்தினம் பிற்பகலுடன் மூடப்பட்டுள்ளன. (க)

## மஹோற்சவம்

(ஊரெழு)

ஊரெழு மேற்கு கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. (த-25)



சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால், புலோலி காந்தியூர் முன்பள்ளிக்கு சுமார் 18 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப் பட்டு வரும் நவீன முன்பள்ளிக் கட்டடம் (படம்: பரு.நிருபர்)

## வீதி புனரமைப்பு

(பொன்னாலை)

அராலி மத்தி - வண்ணபுரம் வீதி நியாப்-II திட்ட நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

நீண்டகாலமாகத் திருத்தப்படாதிருந்து வந்த இந்த வீதியை, வலி - மேற்குப் பிரதேச சபையினர் தற்போது புனரமைத்து வருகின்றனர். (த-49)

## கொழும்பில் இரு தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

வட தமிழீழப் பகுதியொன்றிலிருந்து தலைநகர் கொழும்பிற்குச் சென்ற இரு தமிழ் இளைஞர்கள் பொலிஸாரினால் களனி பாலத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

அடையாள அட்டைகள் அவர்களிடமில்லை என்பதற்காவே கைது செய்யப்பட்டதாக தெரிவித்துள்ள பொலிஸார் இவர்களை எந்த காவல்நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதான தகவல்கள் எதனையும் வெளியிடவில்லை. (க)

## மாடிக் கட்டடம் நிர்மாணம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புலோலியில் சுமார் 50 இலட்சம் ரூபா செலவில் மாடிக் கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இக்கட்டடம் புலோலிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அண்மையில் பிரதான வீதியில் சங்க நிதியின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தெரிவித்தார். (த-52)

## இளைஞர் யுவதிகள் ஒன்றியம் ஆரம்பம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கத்தோலிக்க திருச்சபையின் புனித - மரியாள் ஆலயப் பங்கிலும், ஏனைய பங்கிலும் உள்ள இளைஞர் யுவதிகள் தங்களுக்கென ''இளைஞர் யுவதிகள் ஒன்றியம்'' ஒன்றைக் கடந்த 15ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பங்குத் தந்தை அருட்திரு ஜேமிஸ் அடிகள் தலைமையில் ஆரம்பித்துள்ளனர். (த-72)

## இடமாற்றம்

(பருத்தித்துறை)

யாழ்.மாநகர சபை சித்த ஆயுர்வேத வைத்தியாசலை டாக்டர் எஸ்.சிவசுப்பிரமணியம் பருத்தித்துறை பிரதேச சபைக்கும், பருத்தித்துறை பிரதேச சபை சித்த ஆயுர்வேத வைத்தியசாலை டாக்டர் திருமதி சகிகலா கணேசமூர்த்தி வலிகிழக்கு பிரதேசசபைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (த-52)

* * *

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் பல வருடகாலமாக பணியாற்றிய அருட் சகோதரி மெக்டலின் கடந்த 16ஆம் திகதி முதல் தெகிவ்ளை திருக்குடும்பக் கன்னியர் மடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அவருக்கு பங்கு மக்கள் சார்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பங்குத் தந்தை அருட்திரு ஜேமிஸ் அடிகள் தலைமையில் பிரிவுபசாரம் நடைபெற்றது. (த-72)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

உள்ளூராட்சி மன்றத் திட்டங்கள் தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் உள்ளூராட்சி மன்றச் செயலாளர்களிற்கான அறிவுறுத்தற் கடிதம் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (த-47)

## மட்டக்களப்பு அலுவலகம் மீதான தாக்குதலில் படையினரோ, புலிகளோ தொடர்புபடவில்லை

### கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னணியில் தமிழீழ விடுதலைப்புலிக[illegible]ளோ, படையினருக்கோ தொடர்பில்லை [illegible] கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல்களை நடத்தியவர்கள் புலிகளும், இராணுவமும் அல்லாத வேறு தரப்பினர் எனவும் அவர்கள் யார் என்பது பற்றி தமக்குத் தெரியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இதுகுறித்து தாம் பேச விரும்பவில்லை எனவும் போதிய பாதுகாப்பு இருப்பதாக தாம் கருதுவதாகவும் தமது பாதுகாப்பை மேலும் அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் மட்டக்களப்பிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகம் மீது குண்டுவீச்சு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-9)

## குற்றச் செயல்கள் குறைவு

பருத்தித்துறை நீதி நிர்வாக பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் அண்மைக் காலங்களாக பாரிய கொள்ளை, களவு, பாலியல் வல்லுறவு சம்பவங்கள் அருகியுள்ளதாகத் தெரிகிறது.

பருத்தித்துறை நீதிமன்றம் இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபட்ட நபர்கள் மீது கடும் நடவடிக்கையெடுத்து அவர்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தமையே குற்றச்செயல்கள் குறைவடைந்துள்ளமைக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீதிமன்றச் செயற்பாட்டினால் இப்பிரதேச மக்கள் நிம்மதியாக வாழக்கூடியதாக உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (து-101)

## மீன்பிடிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு



வேலணைக் கடலில் கடற்தொழிலுக்குச் சென்ற இளம் மீனவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை 3 மணியளவில் கனகசபை காந்தரூபன் (வயது-23) என்ற மீனவர் தனியாக மீன்பிடிக்கச் சென்றுள்ளார்.

பின்னர் காலை 6மணியளவில் இவரது படகு தனியாகச் செல்வதை அவதானித்த சக மீனவர்கள் அருகே சென்று பார்த்தபோது குறித்த மீனவரின் சடலம் மிதப்பதைக் கண்டு உடனடியாக உறவினருக்கு தகவல் தெரிவித்தனர்.

இவருக்கு வலிப்பு நோய் இருப்பதாக உயிரிழந்தவரின் தந்தை தெரிவித்தார். (த-132,133)

## உள்ளூர் வருமானம் தொடர்பான புதிய சட்டமூலம் தயாரிப்பு

(கொழும்பு)

உள்ளூர் வருமானம் சம்பந்தமான புதிய சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவுள்ளது. இந்தச் சட்டமூலத்தை தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த வருட வரவு- செலவுத் திட்டத்தின் பிரேரணைகளினது ஒரு அம்சமாகவே இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வரவு- செலவுத் திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வைகள் மற்றும் வரிகள் சம்பந்தமான பிரேரணைகளை உள்ளடக்கியதாக இது காணப்படுகிறது.

மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்தில் இந்தச் சட்ட மூலத்தைச் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் நடைமுறையில் உள்ள 2000ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட உள்ளூர் வருமானச் சட்டம் பல தரப்பட்ட திருத்தங்கள் கொண்டுவரப்பட்டமையால் சிக்கல் அடைந்துள்ளது.

2006ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்டத்தில் பொது நிர்வாகத்தை ஒழுங்கமைக்கவும் அரசாங்க வருமானத்தை அதிகரிக்கவும் வேண்டிய பல பிரேரணைகள் இடம்பெற்றிருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

## க.கா.குழு அலுவலகம் மீதான தாக்குதல் முழுமையான விசாரணைக்கு உத்தரவு

மட்டக்களப்பு கண்காணிப்புக்குழு அலுவலகம் மீதான தாக்குதல் தொடர்பில் விரைவான விசாரணை நடத்த பாதுகாப்பு அமைச்சுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் தகவல் அமைச்சு இது தொடர்பில் வெளியிட்டுள்ள மஹிந்தவின் செய்திக் குறிப்பில்,

கண்காணிப்புக்குழு அலுவலகம் மீதான குண்டுவீச்சு போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாத வகையில் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பிலான அறிக்கையை மஹிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.

கண்காணிப்புக் குழுவினருக்கு எதிராக இந்தத் தாக்குதலை நடத்திய தனிநபர்கள் அல்லது குழுவினரை கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுக்கவும் பாதுகாப்பு அமைச்சுக்கு மஹிந்த அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இத்தகைய தாக்குதல்கள் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளை மிகக் கடுமையாகப் பாதிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## க.பொ.த. உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி ஏப்ரலில் நடக்கும்

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் இந்த ஆண்டு திட்டமிட்டபடி ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க இ[illegible]லாத தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு மற்றுமோர் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அடுத்த ஆண்டு உயர்தரப் பரீட்சைகளை தேசிய உற்சவ தினங்களைத் தவிர்த்து நடத்தும் சாத்தியம் பற்றியும் பரீட்சைகள் திணைக்களம் கவனம் செலுத்திவருகிறது. (கு)

## கட்டாய கல்விக்கான வயதெல்லை நீடிப்பு

(கொழும்பு)

கட்டாயக் கல்விக்கான வயது எல்லையை நீடிக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிறேம் ஜெயந் தெரிவித்துள்ளார்.

கட்டாயக் கல்விச் சட்டத்தின் கீழ் அனைத்துச் சிறுவர்களும் 6 வயது முதல் 14 வயது வரை கல்வி கற்க வேண்டும்.

இந்த வயதெல்லையை 18 வயதுவரை நீடிப்பதற்கு தாம் உத்தேசித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இலவச கல்வியின் தந்தையாகக் கருதப்படும் கலாநிதி சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரவின் 16ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற விழா ஒன்றில் கலந்துகொண்டு அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சிறுவர்கள் நலன்கள் குறித்து விசேட கவனஞ்செலுத்தப்பட்டுள்ள 'மஹிந்தவின் சிந்தனை' என்ற கொள்கைகள் மேலும் கடைப்பிடிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (க-7)

### திருமலையில்

## வர்த்தக நிறுவனம் மீது கைக்குண்டு வீச்சு

திருகோணமலையில் தமிழரின் வர்த்தக நிறுவன்ம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் மாலை அடையாளம் தெரியாத நபர்களால் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

திருமலை மடத்தடி சந்தியில் உள்ள இந்த நிறுவனத்தின் உள்பகுதியில் கைக்குண்டு வெடித்துச் சிதறியதில் அந்த நிறுவன ஊழியர் தேவதர்சன் (வயது-25) படுகாயமடைந்தார். வர்த்தக நிறுவனமும் சேதமடைந்துள்ளது.

திருகோணமலை பொலிஸ் தலைமையகத்திற்கு அருகாமையில் பிரதான வீதியில் இந்த நிறுவனம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

படுகாயமடைந்த தேவதர்சன் மிக ஆபத்தான நிலையில் கண்டி பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். (ஜ)

## ஜயந்தி தினம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் சுவாமி விவேகானந்தரின் ஜயந்தி தினவிழா எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது.

சுவாமி சித்ரூபானந்தா தலைமையில் நடைபெறும் இவ்விழாவின் ஆரம்ப நிகழ்வுகளாக மங்கள ஆரத்தி, விசேட பூசைகள், பஜனைகளும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-52)



இலங்கை மெதடிஸ்த திருச்சபை பொலிகண்டியில் நடாத்திய தையல் பயிற்சிச் சான்றிதழ் வழங்கும் விழாவையும் கண்காட்சியையும் பருத்தித்துறைப் போதகர் அருட்திரு ஜீ.ஏ.சதீஸ் அடிகளார் மங்கள விளக்கேற்றி ஆரம்பிப்பதையும், அருட்திரு ஜே.எஸ்.கதிரவேற்பிள்ளை அடிகளார் கண்காட்சியைத் திறந்துவைப்பதையும், அருட்திரு டி.அழகராஜா அடிகளார் சான்றிதழ்கள் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: பரு. நிருபர்)*

# சீரழியும் சினிமா திருந்த இடமுண்டா?

(தொடர்ச்சி...)

''பரமசிவன் அருள்புரிய
வந்து வந்து போவார்
பதிவிரதைக் கின்னல் வரும்
பழையபடி தீரும்'

என்பதற்கிணங்க வெளிவந்து கொண்



டிருந்த திரைப்பட உலகில் 1948- 49 களில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தினார் அறிஞர் அண்ணா தனது 'வேலைக்காரி' திரைப்படமூலம்.


''....... ஆச்சிரமத்தைக் கண்டோம். கடவுள் அருளுக்கு வழிகாட்டப்படும் இடமென்று பாமரர்கள் நம்பும் அந்த இடம் காமவேள் நடனசாலையாக இருக்கக் கண்டோம்.... இளிச்சவாயர்களுக்குப் பகலிலே உபதேசம். இன்பவல்லிகளுக்கு இரவிலே சுகம்.... குருடனுக்குக் கோல் தேவைப்படுவது போல, ஊரை ஏமாற்றிக் குடிகெடுப்பவனுக்கு வேஷம் தேவைப்படுகிறது....''

'வேஷமணியாத வேதாந்தி
மோடி செய்யாத மாது
ஜோடி இல்லாத மாடப்புறா
சேடி இல்லாத ராஜகுமாரி'

இருக்க முடியாதாம்... 'ஹரிஹரதாஸ்' இத்தகையதோர் வேடதாரி... இந்த ஆச்சிரமத்திலே, காதிலே குண்டலங்கள் ஆட, கனத்த சாரீரங்கள் பாட, காய்ச்சிய பால் தொண்டையில் ஓட, கண்கள் கதியற்றுக் கன்னியரை நாட கடவுள் அருளுக்கு வழி காட்டப்பட்டதாம்... சிரித்திடும் நரி சிவசொரூபத்தில் இருந்தது'.


அண்ணாவின் 'வேலைக்காரி' படத்துக்கு விமர்சனம் எழுதிய 'கல்கி' உறையிலிருந்து உருவும்போது பளிச்சிடும் வாளைப்போல மின்னும் 'வசனங்கள்' என்கிறார். அண்ணாவின் வழிவந்த கலைஞரின் கைவண்ணம் மின்னுகிறது 'பராசக்தி' படத்தில்.

''... சிங்கத்திருநாடே, நீ சிலந்திக் கூடாக மாறியது எப்போது? வந்தோரை வரவேற்ற தமிழகமே, நீ சொந்த நாட்டுக்காரனையே சுரண்டுவது எத்தனை நாளாக?.... உயர்ந்த கோபுரங்கள்... தாழ்ந்த உள்ளங்கள்... வானத்தை முட்டும் மாளிகைகள்... மானத்தை மறந்த மனிதர்கள்...' என்ற பராசக்தி வசனங்களை இன்று யாரால் மறக்க முடியும்?



ஆனால் இன்று? 'மச்சி, மாமு, கலரு, ஃபிகரு...' என்றெல்லாம் எழுதித் தமிழைக் கொச்சைப் படுத்துவதால் சினிமாவின் தரத்தை உயர்த்திப் பிடிக்கிறார்களா? மொழியின் மீதும் இவர்களுக்கு மரியாதை இல்லை. இந்த மண்ணின் மரபார்ந்த பண்புகள் குறித்தும் இவர்களுக்கு அக்கறை இல்லையெனில்த இவர்கள் தயாரிக்கும் படங்களால் யாரோ சிலரின் பணப்பெட்டி நிரம்புவதைத் தவிர சமூகத்துக்கு என்ன பயன்?

இன்று நம் காதுகளில் வந்து விழும் பாடல்கள் வாலிப வயோதிபர்களுக்கு வழங்கப்படும் ரகசிய ராத்திரி லேகியங்களாக காமவிகாரக் கூச்சல்களாகச் சிறுமையுற்று ஒட்டுமொத்த சமுதாயத்தின் கண்ணியத்தையும் காயப்படுத்துகின்றன. நம் பாடலாசிரியர்கள் மனங்களில் சுரக்கும் கற்பனைகள் தமிழர்தம் பண்பாட்டுக் கல்லறைகளின் மேல் மன்மத மலர்வளையங்கள் வைத்து மகிழ்கின்றன. 'காமத்தைக் கூட சுற்றி நான்கு சுவர்களுக்குள் தூக்கமின்றிக் கிடந்தோம், சிறு துன்பம் போன்ற இன்பத்திலே இருவருமே நடந்



தோம்' என்று கண்ணதாசனைப் போல் இலைமறை காயாக எழுத வார்த்தைகள் இவர்களுக்கு வசப்படவில்லையா?

விரசமில்லாது படமெடுத்தால் வியாபாரமாகாது என்ற மனநோய்க்கு நம் சினிமா சகோதரர்கள் மருந்து கண்டாக வேண்டும். அரசியல்வாதிகள், காவல் துறையினரின் தவறுகளை அதீத கற்பனைக் காட்சிகளிலும் ஆவேசம் பொங்கும் வசனங்களிலும் எல்லை கடந்து விமர்சிக்கும் திரைப்பட நீதி தேவர்கள் தமது முதுகையும் பார்க்க முயலட்டும்.

'என் தமிழர் படமெடுக்க ஆரம்பம் செய்தார்
எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்து நூறாக
ஒன்றேனும் தமிழர் நடையுடை
பாவனைகள்
உள்ளது வாய் அமையவில்லை
ஒன்றேனும் தமிழருமை
உணர்த்துவதாயில்லை...'

....என தமிழ் நாட்டில் சினிமா நிலை பற்றி கூறவந்த பாவேந்தர்

'படக்கலைதான் வாராதா என நினைத்த நெஞ்சம்
பாழ்படுத்தும் முதலாளி வர்க்கத்தின் செயலால்
படக்கலையாம் சனியொழிந்தால்
போதுமென எண்ணும்
..... எனக் கண்ணீர் சிந்துகிறார்.

-தமிழருவி மணியன்

நன்றி- ஆ.வி.

# தமிழர்களுக்கு இருக்கும் தலைமைத்துவம் போல் சிங்கள அரசுக்கும் இருக்கின்றதா?

(கிளிநொச்சி)

தமிழருக்கு என்று ஒரு தலைமை, ஒரு சிறந்த கட்டுக்கோப்பு, சிறந்த திட்டமிடல் இருக்கின்றது. சிங்கள அரசுக்கு என்று ஒரு தலைமைத்துவம் இருக்கின்றதா? இவ்வாறு கேள்வி எழுப்புகிறார் தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவட்ட தலைமைச் செயலகப் பொறுப்பாளர் சுரேஷ்.

கித்துள் பாடசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின், 13ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். அவர் மேலும் கூறுகையில்,

'ஜே.வி.பியா? அல்லது ஹெல உறுமயவா? அல்லது மஹிந்த ராஜபக்ஷ வா? சிங்கள அரசுக்கு தலைமைத்துவம். சமாதானப் பேச்சுவார்த்தைக்கு யார் போவது? அவர்களது ஆலோசனை என்ன? திட்டம் என்ன எதுவுமே இல்லாது காணப்படுகின்றது.

20 வருடங்களுக்கு முன் எமது தேசியத்தினை, தமிழீழத்தினை ஆயுதப் போராட்டத்தின் மூலம் மீட்டு எடுப்போமா என்று சந்தேகம் கொண்டு தமிழ் அரசியல்வாதிகளும், தமிழ் புத்திஜீவிகளும் போராட்டத்தின் மூலம் தமிழினமே அழியப்போகின்றது என ஏங்கி இருந்த காலத்தில் சிறிய எண்ணிக்கையிலான போராளிகளைக் கொண்டு பெரியளவிலான படைகளை யாழ்.கோட்டைக்குள் முடங்கி சிங்களப் படைத்தளபதியையே பிடிப்பதற்கு முயற்சி செய்தவர் கிட்டு அண்ணன்.

சிங்கள இராணுவத்தினர் யாழ்.கோட்டைக்குள் அடங்கி யாழ்.பகுதிக்குள் வெளியேற விடாது எமது தேசத்தின் மக்களை சுதந்திரமாக நடமாடவிட்டவர் அவர். அன்றே எமது தமிழீழத்தைக் காட்டி விட்டார்.

கடந்த இருபது வருடங்களுக்கு முன்பே புலிகள் சாதிப்பார்கள் என்பதை சிங்கள இராணுவத்திற்கும், அரசுக்கும் அறியப் படுத்தியவர் கிட்டு அண்ணன்.

அதனை நெறிப்படுத்தும் வகையில் அவரது பேரில் தலைவர் அவர்களால் கிட்டு பீரங்கிப் படையணி வளர்ந்து இருக்கின்றது' என்றார். (க)

# சமாதானப் பேச்சை புலிகள் விரும்புவர்

## பிரஸ்கர் நம்பிக்கை

(கிளிநொச்சி)

தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையினை ஆரம்பிக்க புலிகள் விரும்புவார்கள் எனத் தான் நம்புவதாக இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் அதற்கான செயற்பாடுகளில் முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகிறார்கள் என கிளிநொச்சியில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பினையடுத்து பிரஸ்கர் தெரிவித்தார்.

புலிகள் மீண்டும் யுத்தமொன்றிற்கு செல்வார்கள் என்று நம்புவதற்கு எந்த வித காரணத்தையும், அறிகுறியையும் தன்னால் அங்கு காணமுடியவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

### ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(நல்லூர்)

வலி தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் பிரதேச விவசாயிகள் குழுக் கூட்டமும் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் பிரதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (து-134)

### உதவிப் பொருட்கள் வழங்கல்

(பொன்னாலை)

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏற்பட்ட மழை வெள்ளம் மற்றும் புயலினால் பாதிக்கப்பட்ட 350 குடும்பங்களுக்கு சாவகச்சேரியில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்தின் அலுவலகத்தில் வைத்து உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

கனேடிய செஞ்சிலுவைச் சங்கத்தினர் இந்த உதவிப் பொருட்களின் பொதிகளை வழங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-49)

# அச்சத்தால் 44 குடும்பங்கள் வவுனியாவுக்கு இடம்பெயர்வு

யாழ்.மாவட்டத்திலிருந்து அச்சம் காரணமாக 44 குடும்பங்கள் வவுனியா வடக்கு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இடம்பெயர்ந்திருப்பதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

இவர்கள் தங்குவதற்கு தற்காலிக கொட்டகைகளும், உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் இருந்து தொடர்ந்தும் நூற்றுக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர் என வன்னி மாவட்டத்தில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின் சுயசரிதை

23 மீள்பார்வை



கொடிகாத்த குமரனாக "ராஜபார்ட் ரங்கதுரை"

அந்த நேரத்தில் சக்தி நாடகசபா என்று ஒரு நாடகக் கம்பெனி இருந்தது. தங்கவேலுப்பிள்ளை என்பவரின் கம்பெனி அது. சக்தி கிருஷ்ணசாமி என்பவர் அந்த நாடகக் கம்பெனியை பொறுப்பேற்று நடத்திக்கொண்டிருந்தார். அந்த நாடகக் கம்பெனியில் பெரிய நடிகர்களான எஸ்.வி.சுப்பையா, எம்.என் நம்பியார் ஆகியோரும் இருந்தனர். இவர்கள் இருவரும் ஜூபிடர் படத்திற்காக சினிமாக் கம்பெனிக்குச் சென்றுவிட்டார்கள்.

எனவே சக்தி நாடக சபாவில் நன்றாக நடிக்கத் தெரிந்த நடிகர்கள் தேவைப்பட்டது. அப்படிப்பட்டவர்கள் யாரென்று பார்த்தால் அதில் நானும் ஒருவனாக இருந்தேன். நான் அண்ணாதுரை அவர்களிடம் இருக்கின்றேனென்று அவர்கள் தெரிந்து கொண்டார்கள்.



பம்பாயில் "தத்தாராம் நாடகக்குழுவினருடன்"...

என்னுடைய பால்ய நண்பர்கள் கரந்தை சண்முகவடிவேலு, கருணாநிதி போன்றவர்கள் அவர்கள் சின்னப் பிள்ளையிலிருந்து என்னுடன் ஒன்றாகவே வளர்ந்தவர்கள். ஆகவே சக்தி கிருஷ்ணசாமி அவர்கள் கரந்தை சண்முகவடிவேலுவை அனுப்பி அண்ணாவிடம் எப்படியாவது கூறி கணேசனை அழைத்து வாருங்கள் என்று சொல்லியிருக்கிறார். அவர் வந்து எங்களுடன் ஏழு நாட்கள் தங்கி இருந்தார். அண்ணா என்னை விடுவதுபோல் இல்லை. அண்ணாவுக்குச் சண்முகவடிவேல் மிகவும் வேண்டியவர். அவருடைய இயக்கத்திலும் ஒருவராக இருந்தவர். எப்படியோ பேசியிருப்பார் போலிருக்கிறது.

அதனால் அண்ணா அவர்கள் என்னிடம் வந்து கணேசா நீ சக்தி நாடக சபாவிற்குப் போ உன்னை எப்பொழுது திரும்பக் கூப்பிட வேண்டுமோ அப்போது நான் கூப்பிட்டுக் கொள்கிறேன் என்று கூறினார். அண்ணாவைப் பிரியமுடியாமல் நான் சக்தி நாடக சபாவிற்கு அவரிடம் இருந்து விடை பெற்றுச் சென்றேன் . அப்பொழுது அந்த நாடகக் கம்பெனி திண்டுக்கல்லில் முகாமிட்டிருந்தது . நான் அங்கு சென்று முக்கிய.வேடங்களை ஏற்று நடிக்க ஆரம்பித்தேன். சக்தி நாடகக் கம்பெனியில் எனக்கு நல்ல மரியாதை கொடுத்தார்கள்.

### ஆனந்த சுதந்திரம்

டி.எஸ்.என்: திண்டுக்கல்லுக்கும் உங்களுக்கும் ஏதோ தொடர்பு இருக்கிறது. ஏனென்றால் நீங்கள் முதன் முதலில் நாடகம் நடிக்கத் தொடங்கியது அங்கு தானே.

சிவாஜி: உண்மைதான் நான் முதலில் நாடக மேடை ஏறிய அதே திண்டுக்கல்லுக்குத்தான் சென்றோம். திண்டுக்கல்லிலிருந்து பெங்களூர் சென்றோம். அந்தக் காலத்தில் அங்கே எப்பொழுதும் கலாட்டாவாக இருக்கும் .அவ்வப்போது கர்ஃப்யூ (Curfew) அதாவது ஊடரங்குசட்டம் போட்டுக் கொண்டே இருப்பார்கள். பெங்களூரில் காந்தி நகர் என்ற பகுதியில் குப்பி என்று ஒரு தியேட்டர் உள்ளது. அந்தத் தியேட்டரை குப்பி வீரண்ணா என்றகர் நாடகத்தின் மிகப் பெரிய நடிகர் நடத்திக்கொண்டிருந்தார் . அந்தத் தியேட்டருக்கு சென்று நாங்கள் நாடகம் நடத்தினோம். அந்த நேரத்தில் தான் நமக்குச் சுதந்திரம் கிடைத்தது. அப்பொழுது எனக்குப் பதினெட்டுப் பத்தொன்பது வயதிருக்கும்.



"ராமன் எத்தனை ராமனடி" படத்தில்...1970

1947 ஆகஸ்ட் 15 ஆம் நாள் நம் நாட்டுக்குச் சுதந் திரம் வந்துவிட்டது என்று கேள்விப்பட்டேன் . அதை எப்படிக் கொண்டாடுவது என்று அப்போது தெரிய வில்லை. எனது குடும்பம் சுதந்திரத்திற்காக பாடுபட்ட குடும்பம். நானும் ஏதோ ராமர் அணை கட்டும் போது அணில் மணல் அள்ளிப்போட்டது என்று சொல்வார்களே அதுபோல் பல நாடகங்களில் சின்னப் பிள்ளையில் கதர்க்கொடியைக் கையில் எடுத்துக்கொண்டு கதர்க்கப்பல் தோன்றுதே என்று பாடியவன். ஆனால் சுதந்திரம் வரும் பொழுது எனக்கு அதைப் பூரணமாக அனுபவிக்கத் தெரிய வில்லை. அந்த வயதில் எங்களுக்குச் சுதந்திரத்தை அனுபவித்துக்கொண்டாட நேரமும் காலமும் வசதியும் கிடையாது. அப்போது நான் மிகவும் வருத்தப்பட்டேன். சுதந்திரத்தைக் கொண் டாட முடியவில்லையே என்று பின்னாளில் சுதந்திரத் தியாகிகள் வேஷத்தில் பல படங்களில் நடித்தேன். சுதந்திரத்தை நன்றாகக் கொண்டாடினேன்.

தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ஈத்முபாரக் என்று பல பண்டிகைகளைக் கொண்டாடுகிறோமே... அதைவிடச் சிறப்பாகக் கொண்டாடப்பட வேண்டியது நமது சுதந்திர தினம் என்று எல்லோருக்கும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

### மீண்டும் பெரியாரின் பாராட்டு

டி.எஸ்.என்: பெங்களூரில் நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்த போது நடந்த முக்கியமான சம்பங்கள் எதையாவது நினைவுகூற முடியுமா?

சிவாஜி: முடியும்... பெங்களூர் நாடகத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் எனக்கு இப்பொழுது நன்றாக நினைவிற்கு வருகிறது. பெங்களூரில் விதி என்றொரு நாடகம் நடத்திக் கொண்டிருந்தோம். அந்த நாடகத்தை ஐயா (பெரியார்) அவர்கள் பார்க்கும் சந்தர்ப்பம் நேரிட்டது.

நான் அந்த நாடகத்தில் வில்லனாக நடித்துக்கொண்டிருந்தேன். கடைசி சீன் நடந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்துவிட்டு ஐயா அவர்கள் தேம்பி தேம்பி அழுது கொண்டிருந்தார். அவ்வளவு கலக்கமான நாடகம் அது.கடைசி காட்சியில் ஹீரோவை வில்லன் சுட்டுவிட்டு ஹீரோயினிடம் சென்று நல்லவன்போல் காதல் நாடகமாடுகிறான். ஆனால் அவளோ அவன் கையில் இருந்த ரிவால்வரைப் பிடுங்கி அவனைச் சுட்டு விடுகிறாள். அப்பொழுது வில்லன் கீழே விழவேண்டும் இதுதான் காட்சி.

(தொடரும்)

# கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களை சொந்த மாவட்டத்தில் நியமியுங்கள்!

### கூட்டமைப்பினர் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அவசர கடிதம்


(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2005ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறிய ஆசிரியர்களை அவர்களது சொந்த மாவட்டத்துக்கே நியமிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் கல்வியமைச்சின் செயலாளருக்கு அவசர தொலைநகல் கடிதம் ஒன்று அனுப்பிவைத்துள்ளனர்.

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2005ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்சியை முடித்துக்கொண்ட ஆசிரியர்களுக்கு சொந்த மாவட்டத்தில் நிரந்தர நியமனத்தை வழங்கக்கோரி மட்டக்களப்பு மாவட்ட ஆசிரியர்கள் மட்டு. மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான த.கனகசபை, க.தங்கேஸ்வரி ஆகியோரிடம் மகஜரை கையளித்து விடுத்த வேண்டுகோளை அடுத்து கல்வி அமைச்சின் செயளாளருக்கு இந்த அவசர வேண்டுகோள் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது.

எம்.பிக்களான த.கனகசபை, தங்கேஸ்வரி, பா.அரியநேத்திரன், எஸ்.ஜெயானந்தமூர்த்தி ஆகியோர்கள் ஒப்பமிட்டு அனுப்பியுள்ள கடிதத்தில் மட்டு. மாவட்டத்தில் உள்ள ஏராளமான வெற்றிடம் யுத்த சூழல், கடல்கோள் பாதிப்பு பற்றிய நிலைமைகளை விசேட கவனத்திற்கு எடுத்து அவரவர் சொந்த மாவட்டங்களுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்குமாறும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)







இலங்கை வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட மாணவர் சேமிப்புத் திட்டத்தில் , மாணவர்களால் 5 இலட்சம் ரூபாவுக்கு மேல் சேமிப்புச் செய்துள்ள வேம்படி மகளிர் கல்லூரி, சுண் டுக்குளி மக ளிர் கல்லூரிகளுக்கு இலங்கை வங்கியால் ஒரு தொகை நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிகழ்வில் மேற்படி வங்கியின் மேற்தரக்கிளை முகாமையாளர் என்.சிவரத்தினம் உரையாற்றுவதை முதலாவது படத்திலும், அன்பளிப்பு நூல் தொகுதிகளை வேம் படிமகளிர் கல்லூரி அதிபர் திருமதி க. பொன்னம்பலமும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ். இராஜரட்ணமும் இலங்கை வங்கி உதவிப் பொதுமுகாமையாளர் க.பாலசுப்பிரமணியத்திடமிருந்து பெற்றுக்கொள்வதை இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் காணலாம்.

## முத்திரைத்தாள் மோசடி

# குற்றவாளிகளுக்கு 10 ஆண்டு சிறை

(மும்பை)

மும்பையில் ரூ.17 லட்சம் மதிப்புள்ள போலி முத்திரைத் தாளை விற்பனை செய்த வழக்கில் அப்துல் கரீம் தெல்கிக்கும், அவனுடைய இரண்டு கூட்டாளிகளுக்கும் மும்பை சி.பி.ஐ.நீதிமன்றத்தில் 10 ஆண்டு கடுங்காவல் தண்டனையும், தலா ரூ.50 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டது. இது முத்திரைத்தாள் மோசடி வழக்கில் நீதிமன்றம் அளிக்கப்பட்ட முதல் தீர்ப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

நாடு முழுவதும் ரூ.33 ஆயிரம் கோடிக்கு போலி முத்திரைத்தாள் மோசடி செய்தவன் அப்துல் கரீம் தெல்கி, நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் இச் செயலை செய்த அவன் புனேயில் உள்ள ஏர்வாடா சிறையில் தற்போது அடைக்கப்பட்டுள்ளான் மோசடியில் இவனுக்கு உதவிய பல போலீஸ் அதிகாரிகளும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.


கடந்த 1995ஆம் ஆண்டு மும்பையில் பூர்ணானந்த் அண்ட் கோ என்ற நிறுவனத்துக்கு ரூ.17 இலட்சம் மதிப்புள்ள போலி முத்திரைத்தாளை தெல்கி விற்றான். தெல்கியின் கூட்டாளிகளான சங்சய் கெய்க்வாட், ராம் ரத்தன் சோனி ஆகியோரும் இதற்கு உடந்தையாக இருந்தனர். அரசு முத்திரைத்தாளை போலியாக தயாரித்தது அவற்றை விற்றது, மோசடி செய்தது உட்பட பல்வேறு பிரிவுகளில் இவர்கள் மீது சி.பி.ஐ.வழக்கு பதிவு செய்தது. மும்பை சி. பி. ஐ.சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடந்தது. தெல்கியிடமும், அவன் கூட்டாளிகளிடமும் 'வீடியோ கான்பரன்சிங் மூலம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. 17 சாட்சிகள் விசாரிக்கப்பட்டன. கடந்த டிசம்பர் 26ஆம் திகதி விசாரணை முடிந்தது.

தீர்ப்பு திகதியை குறிப்பிடாமல் நீதிபதி சால்வி ஒத்திவைத்து நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கினார்.

குற்றவாளிகள் மூவருக்கும் ஆயுள் தண்டனை அளிக்கும்படி அரசு வக்கீல் கோரினார். வீடியோ கான்பரன்சிங் மூலம் நீதிபதி முன் தோன்றிய தெல்கி, 'நான் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளேன். என் மனைவியும் உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். என் மீது கருணை காட்டுங்கள். குறைவான தண்டனையை வழங்குங்கள்' என்று கெஞ்சினான். நீதிபதி சால்வி தனது தீர்ப்பில், தெல்கி சஞ்சய் கெய்க்வாட், ராம் ரத்தன் சோனி ஆகியோரை குற்றவாள்ிகளாக அறிவித்து அனைவருக்கும் பத்தாண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்ததுடன் தலா ரூ.50ஆயிரம் அபராதமும் விதித்தார்.

முத்திரைத்தாள் மோசடி தொடர்பாக பல்வேறு மாநில நீதிமன்றங்களில் வழக்குகள் நடந்து கொண்டிருந்தாலும், இந்த மோசடி வழக்கில் வழங்கப்பட்டுள்ள முதல் தீர்ப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

WORLD NEWS உலக தரிசனம்



படத்தில் காணப்படும் அடுக்கி வைக்கப்பட்டுள்ள தங்கக் கட்டிகளும வெட்டி எடுக்கப்பட்ட தங்கக் கற்களும் அமெரிக்காவின நியுமான்ட் தங்கச் சுரங்கத்திலிருந்து எடுக்கப்பட்டவை. அமெரிக்காவில் 1981ஆம் ஆண் டிலிருந்து இதுவரை இல்லாத அளவு ஒரு தங்கக் கட்டியின் விலை ரூ.20ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

# பிஜி நாட்டு இராணுவ தளபதிக்கு மூத்த அதிகாரி கொலை மிரட்டல்

மூத்த அதிகாரி பாலிடோகத்ரோகா தன்னை சுட்டுக் கொன்றுவிடுவதாக மிரட்டல் விடுத்ததாக பிஜி நாட்டின் இராணுவ தலைமை தளபதி பிராங் பெய்னிமராமா புகார் கூறியுள்ளார்.

பிஜி இராணுவத்தில் தரைப்படையின் கொமாண்டராக பணி புரிந்தவர் பாலிடோகத்ரோகா இராணுவ தலைமை தளபதி பெய்னிமராமாவின் பள்ளித் தோழரான இவர் கடந்த வியாழக்கிழமை பதவி நீக்கம் செய்யப்பட்டார். அதன் பின்னணி விவரம் தற்போது வெளியாகியுள்ள இராணுவ தலைமை தளபதிக்கு கொலை மிரட்டல் விடுத்ததை அடுத்து பாலிடோகத்ரோகா பதவி பறிபோனது என்ற விவரம் தற்போது தெரியவந்துள்ளது.

கொலை மிரட்டல் விவகாரம் தொடர்பான விபரத்தை பெய்னிமராமா உள்ளூர் நிருபர்களிடம் கடந்த சனிக்கிழமை தெரிவித்தார்.

இதனிடையே இராணுவ தலைமை தளபதிக்கு கொலை மிரட்டல் ஏதும் தான் விடுக்கவில்லை என்று பதவிநீக்கம் செய்யப்பட்ட கொமாண்டர் பாலிடோகத்ரோகா மறுப்பு தெரிவித்துள்ளார். (ந)

# பயிற்சியின் போது விபரீதம் நொறுங்கி விழுந்தது விமானம்

(அகமதாபாத்)

துப்பாக்கி சுடும் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது மிக்–21 ரக போர் விமானம் திடீரென நொறுங்கி விழுந்து விபத்திற்குள்ளானது. இதில் அந்த விமானத்தின் பைலட் எவ்வித காயமும் இன்றி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் உள்ள ஜாம் நகரில் அமைந்துள்ளது இந்த விமானப்படை பயிற்சித் தளம். இந்த விமானப்படை தளத்தில் உள்ள சாம்ராட் துப்பாக்கி சுடும் பயிற்சித்தளத்தில் மிக்–21 ரக போர் விமானம் ஒன்று நேற்று முன்தினம் வழக்கம்போல் போர்ப்பயிற்சியில் ஈடுபட்டிருந்தது. வானிலிருந்து பூமியை நோக்கி வெடிகுண்டுகளையும், துப்பாக்கிக்குண்டுகளையும் குறிபார்த்து வீசும் பயிற்சியில் அந்த போர் விமானம் தீவிரமாக ஈடுபட்டிருந்தபோது, திடீரென விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டது.


இதையடுத்து மிகக்குறைந்த வினாடிகளுக்குள்ளேயே அந்த மிக்–21ரக போர் விமானம் திடீரென தீப்பிடித்து நொறுங்கிச் சிதறியது. இருப்பினும் விமானத்தில் தீப்பிடித்த உடனேயே அந்த விமானத்தின் பைலட் ஜெ.பி.எஸ்.பெய்ன்ஸ் கீழே குதித்து அதிர்ஷ்டவசமாக எவ்விதக் காயமும் இன்றி உயிர்தப்பினார்.

விமானம் நெர்றுங்கிக் கீழே விழுந்த போது, தரைத்தளத்தில் இருந்தவர்களுக்கும், அதனால் எந்தவித சேதமும் ஏற்படவில்லை. இருப்பினும் இந்த விமான விபத்து தொடர்பாக விசாரணை நீதிமன்றம் ஒன்று அமைக்கப்படும் என்று உத்திரவிடப்பட்டிருப்பதாக இந்திய விமானப்படையின் செய்தித் தொடர்பாளர் டி.கே.சின்ஹா தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் ஏற்பட்ட முதல் மிக்–21 ரக போர் விமான விபத்து இதுவேயாகும். இதற்கு முன், கடந்த புத்தாண்டுகளில், மிகக்குறைந்தளவே மிக்–21ரக போர் விமான விபத்துக்களை இந்திய விமானப் படை சந்தித்து இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ந)

ரஷ்யாவில் யெகட்டரீன்பர்க் என்ற இடத்தில் உள்ள அடுக்குமாடிக் கட்டடம் ஒன்றில் தீப்பிடித்தது. தீயணைப்பு வீரர்கள் பல மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.





ஆபிரிக்க மனித குரங்குகளை பாதுகாப்பதில் வாழ்நாள் சேவைக்காக இங்கிலாந்தைச் சேர்ந்த ஜானே குடால் என்ற பெண்மணிக்கு யுனெஸ்கோ விருது வழங்கப்பட்டுள்ளது. விருதைப் பெறுவதற்காக பாரீஸ் வந்த குடால், ஒரு மனித குரங்கு பொம்மையை காட்டி மகிழ்கிறார்.

# சதாம் வழக்கை விசாரிக்க புதிய நீதிபதி நியமனம்

(பக்தாத்)

சதாமை விசாரிக்க சய்யீது அல்–ஹமீஸ் என்பவர் புதிய நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். தற்காலிக நீதிபதியாக அவர் செயல்படுவார்.

சதாம் ஹுசைன் மீதான வழக்கு விசாரணை ஈராக் நீதிமன்றத்தில் நடந்துவருகிறது. நீதிமன்ற தலைமை நீதிபதியாக செயல்பட்டு வந்த முகமது அமீன் திடீரென தனது பதவியை இராஜினாமா செய்தார்.

இந்நிலையில், வரும் 24ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு வருகிறது. இதையடுத்து தற்காலிக நீதிபதியாக சய்யீது அல்–ஹமீஸ் நியமிக்கப்பட்டுள்ளார். நீதிமன்ற தீர்ப்பாயத்தில் இடம்பெற்றுள்ள நீதிபதிகள் புதிய தலைமை நீதிபதியைத் தேர்ந்தெடுக்கும்வரை சய்யீது தற்காலிக நீதிபதியாக செயல்படுவார். (ந)

கடனறிந்து காலங் கருதி இடனறிந்து
எண்ணி உரைப்பான் தலை.
-குறள்.

வலம்புரி

## எரிக்சொல்ஹெய்மின் தூது வெற்றி பெறட்டும்

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையினான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்காக நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இலங்கைக்கு வரும் அவர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆகியோரைச் சந்தித்து பேசவுள்ளார்.

சமாதான அனுசரணையாளராக பணியாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நோர்வே அதற்கான விசேட தூதுவராக எரிக்சொல்ஹெய்மை நியமித்திருந்தது.

2002 ஆம் ஆண்டு நோர்வேயில் நடைபெற்ற தேர்தலின் போது எரிக்சொல்ஹெய்மின் கட்சி ஆட்சிப் பலத்தை இழக்க நேரிட்டது.

இருந்தும் புதிதாகப் பதவியேற்ற நோர்வே அரசு இலங்கைக்கான சமாதானப் பணியில் எரிக்சொல்ஹெய்மையே ஈடுபடுத்தியது.

அந்த நாட்டு மக்களின்-ஆட்சியாளர்களின் உயரிய பண்பையும் நேர்மைத்தனத்தையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

2005 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலின் எரிக்சொல்ஹெய்மின் கட்சி மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது.

தற்போது அவர் அமைச்சராகப் பதவியேற்றுள்ளார். அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றபின்னர் எரிக்சொல்ஹெய்மின் இலங்கைக்கான முதலாவது விஜயம் இதுவாகும்.

இதற்கு மேலாக மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நோர்வேயின் முதலாவது சமாதானப் பணியும் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்குப் அப்பால் எரிக்சொல்ஹெய்மின் வருகை மற்றுமோர் விடயத்தில் முதன்மை பெறுகின்றது.

அதாவது யுத்தநிறுத்த உடன்படிக்கை சீர்குலைந்து வன்முறைச் சம்பவங்கள் - உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் எரிக்சொல்ஹெய்ம் இலங்கைக்கு வருகை தருகின்றார்.

எனவே கடந்த காலங்களை விட அவரின் விஜயம் முதன்மையும் முக்கியமும் பெறுகின்றது. தூதுவர் எரிக்சொல்ஹெய்மின் வருகை இருதரப்புடனும் அவர் நடத்தும் பேச்சுவார்த்தை-இருபக்கத்திலும் முன்வைக்கப்படும் நிபந்தனை என்பவற்றைப் பொறுத்தே சமாதானப் பேச்சுவார்த்தை சாத்தியமா? இல்லையா? என்ற முடிபை எடுக்க முடியும்.

அவ்வகையில் எரிக்சொல்ஹெய்மின் வருகை சண்டையா? சமாதானமா? என்பதை தீர்மானிப்பதாக இருப்தோடு இருதரப்புடனான பேச்சுக்கள் குழப்பமாக இருப்பின் நோர்வேயின் சமாதானப் பணி முடிவுறும் என்பதும் எரிக்சொல்ஹெய்மின் இலங்கைக்கான விஜயம் இதுவே இறுதியானதென்பதும் தீர்மானிக்கப்படும்.

ஆக வருகின்ற தூது வெற்றிபெற நாட்டில் சமாதானம் நிலைபெற இறைவனைப் பிரார்த்திப்போம்.

# லக்ஷ்மன் கதிர்காமர் கொலை வழக்கு; சந்தேக நபர்களின் பிணை மனு நிராகரிப்பு!

(கொழும்பு)

லக்ஷ்மன் கதிர்காமர் கொலை வழக்கில் சந்தேக நபர்கள் ஐவரின் பிணை மனுவை கொழும்பு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கதிர்காமர் கொலை வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு நீதிபதி சரோஜினி குசல வீரவர்த்தன முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

சந்தேக நபர்கள் ஐவரும் தாக்கல் செய்த பிணை மனுவை நிராகரித்த நீதிபதி அனைவரையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

சந்தேக நபர்களில் ஒருவரான இசோதர் ஆரோக்கியநாதனுக்கும் பாதாள உலகக் குழுவினருக்கும் இடையே தொடர்பு இருப்பதாக கொழும்பு குற்றப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்தனர்.

வழக்கின் சாட்சி ஆவணங்கள் அரச பகுப்பாய்வாளருக்கு அனுப்பி அதன் அறிக்கையை அடுத்த விசாரணையின் போது தாக்கல் செய்ய குற்றப் பிரிவினருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

சந்தேக நபர்களான தமிழ் இனியன், ரங்கம் விநாயகம் ஐயர் ராஜ்குமார், இசோதர் ஆரோக்கியநாதன் மற்றும் முத்தையா சகாதேவன் ஆகிய ஐவரும் நீதிமன்றில் பாதுகாப்புக் காரணங்களுக்காக முன்னிலைப்படுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கில் தொடர்புடைய முக்கிய நபரை கண்டுபிடிப்பதற்காகவும் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தை கண்டுபிடிக்கவும் சிறப்பு பொலிஸ் குழு அமைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றப் பிரிவு உதவி ஆய்வாளர் எம்.ஏ.ராஜபக்ஷ நீதிமன்றில் தாக்கல் செய்த அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

இந்தக் குழுவானது பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டே அறிவுறுத்தலில் அமைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் இவ்வருடம் துரிதப்படுத்தப்படும்

(கொழும்ப)

வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் இந்த வருடத்தில் துரிதப்படுத்தப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை யின் தலைவர் எம்.ரி.எஸ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி நிதியத்தின் உதவியுடன் சில வீதி அபிவிருத்திச் செயற்திட்டங்கள் இந்த வருடத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இச் செயற்திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள 300 கிலோ மீற்றர் தூரமுள்ள வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இதற்கென 488 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மேலும் 500 கிலோமீற்றர் வீதியை அபிவிருத்தி செய்வதற்குத் திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்குத் தேவையான திட்டங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளன. இச் செயற்திட்டிற்கு 10 கோடி டொலர் வெளிநாட்டு உதவி கிடைக்கவுள்ளது.

இலங்கையில் ஆரம்பிக்கப்படவுள்ள அதிவேக பாதை நிர்மாண வேலைகள் இந்த வருடத்திற்குள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். யுத்தத்தினால் சேதத்திற்குள்ளான பகுதிகளைப் புனர மைக்கும் செயற்றிட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்குப் பிரதேசங் களில் உள்ள வீதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைக ளும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. (து-7)

# தேசிய இளைஞர் தினம்

(பொன்னாலை)

சுவாமி விவேகானந்தர் நினைவாக அனுஷ்டிக்கப்படும் தேசிய இளைஞர் தினம் நாளை காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலையில் நடைபெறவுள் ளது.

பாடசாலை அதிபர் திருமதி க.பொன்னம்பலம் தலைமையில் மேற் படி நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் சுவாமி விவேகானந்தரின் அபிலாஷை யாது? எனும் தலைப்பில் சுவாமி சித்ரூபானந்தாவின் உரை இடம்பெறவுள்ளது. (து-49)

# முஸ்லிம் குடும்பஸ்தர் கடத்தப்பட்டு கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பிரதேசத்தில் முஸ்லிம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் முற்பகல் இனந்தெரியாத குழுவொன்றினால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள் ளார்.

இச்சம்பவத்தின் பொழுது மற்றுமொருவர் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த அகமது லெப்பை அப்துல் வாஹித் (வயது-36) என அடை யாளம் காணப்பட்டுள்ளார். ஆலையடி வேம்பு வயல்வெளியொன்றில் நேற்று முன்தினம் பிற்பகல் சடலம் பொலிஸாரினால் கண்டெடுக்கப்பட்டது.

குறிப்பிட்ட இருவரும் நேற்று முன்தினம் முற்பகல் மோட்டார் சைக்கிளில் படம் பார்ப்பதற்காக சென்று கொண்டிருந்த சமயம் வழிமறித்த இனந்தெரியாத குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்டு தாக்குதலினை மேற்கொண்டனர். தாக்குதலிலிருந்து தப்பி வந்த நபர் தம்பி ஆதம்லெப் (வயது-25) பொலிஸாரின் உதவியுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட சம்பவத்தினையடுத்து அக்கரைப்பற்று முஸ்லிம் பிரதேசத்தில் பதற்ற நிலை உருவாகியுள்ளது. இதனையடுத்து அரசாங்க அலுவலகங்கள் கடைகள் யாவும் மூடப்பட்டன. மேலதிகப் பொலிஸாரும், அதிரடிப் படையினரும் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர். (இ-4)

# கால்கோள் விழா

(பருத்தித்துறை)

மட்டுவில் கமாலசனி வித்தியாலயத்தில் முதலாம் ஆண்டின் புதிய மாணவர்களை அனுமதிக்கும் கால்கோள் விழா இன்று நடைபெறவுள்ளது.

இவ்வித்தியாலய அதிபர் எஸ் பேரின்பநாதன் தலைமையில் இவ் விழா நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா புதிய மாணவர்களின் எதிர்கால நல்வாழ்வுக்கு ஆசி வழங்குவார். (து-52)

# இலஞ்சம் பெற்ற மேயருக்கு 31 ஆம் திகதி வரை விளக்கமறியல்

(கொழும்பு)

நீர்கொழும்பு மேயர் எஸ்.எஸ் ஹென்றி பெர்னாண்டே இலஞ்சக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் காண்காணிப்பாளரும் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணைக் குழுவின் தலைவருமான நெவிலி கூருகே இதுதொடர்பில் கூறுகையில், நீர்கொழும்பு மாநகரசபையின் ஒப்பந்தம் ஒன்றிற்காக பாதுகாப்பு நிறுவனத்திடமிருந்து ரூபா 50 ஆயிரம் இலஞ்சம் கேட்டதற்காக உள்ளதாக தெரிவித்தார்.

இலஞ்சத் தொகையில் ரூபா 25 ஆயிரம் மேயரின் உதவியாளருக்கு அளிக்க திட்டமிடப்பட்டிருப்பதாகவும் இந்தப் பணம் பரிமாறப்படும் போது இருவரும் கைது செய்யப்பட்டதாகவும் மேலும் கூறினார்.

கைது செய்யப்பட்ட நேயரும் அவரது உதவியாளரும் கொழும்பு தலைமை நீதிபதியிடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இருவரையும் எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க தலைமை நீதிபதி உத்தரவிட்டார். (து)

# கும்பாபிஷேகம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு இறுப்பிட்டி பெரியபுலம் வீரகத்தி விநாயகர் கோவிலில் இன்று எண்ணெய் சாத்துதல் வைபவமும் நாளை காலை 7.30 மணிமுதல் 8.24 மணிக்கு கும்பாபி ஷேகமும் நடைபெறவிருக் கின்றன. (க)

## சாயி அருளமுதம்



சத்தியத்தை அறிந்திருக்கும் நிலையில் வாழ்வது எல்லோருடைய கடமையுமாகும். பூவுலகில் வாழ்பவன் எவனோ அவன் முதலில் மனிதனாக ஆக வேண்டும். பின்னர் அவன் கடவுளையறியும் மார்க்கத்தைக் கற்று ஆத்மானந்தத்தைக் கண்டறிய வேண்டும். இதுவே வேதங்களிற் கூறப்பட்டுள்ள 'ராஜயோக' பாதையாகும். ஆத்மாவானது எல்லாப் பொருட் களுக்கும் ஒளியூட்டுகிறது. தான் பிரகாசிப்பதற்கு வேறொரு மூலாதாரத்திலிருந்து ஒளிபெற வேண்டிய அவசியம் அதற்கு இல்லை. ஆத்மா பிரபஞ்சத்தைக் காணும் சாட்சியாக விளங்குகிறது.

# மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சிவில் நிர்வாகம் சீர்குலைந்துள்ள யாழ்ப்பாணத்திலிருக்கும் மக்கள் தமது பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் இராணுவத்தின் தலையீடுகள் அற்ற இடத்திற்குச் செல்லுமாறு யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படைகளும் இராணுவத் துணைக் குழுக்களும் மக்களைக் கொன்று குவிக்கும் பாதகங்களை சிறிலங்கா அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன் அரங்கேற்றுகின்றன.

அப்பாவிகள் நாம் எதுவும் அறியோம் எனக் கதறியும் காட்டுமிராண்டித்தனமாக ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் என்ற வேறுபாடின்றி வீதிகளிலே தாக்கப்படுகின்றனர்.

பெண்கள் பலர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுகின்றனர். உடற்சோதனை என்ற பேரில் அவமானப்படுத்தப்படுகின்றனர். படுகாயமடைந்தவர்கள் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படாது தடுக்கப்படுகின்றனர்.

இரவினிலும் தேடுதல் என்ற பெயரில் வேலி பிரித்து நடு வீட்டில் அட்டகாசம் செய்கின்றனர். இராணுவத் துணைக்குழுக்கள் நடுநிசியில் வீடு புகுந்து கொள்ளையடிக்கின்றனர். எவ்வகைப்பாதுகாப்புமற்ற வாழ்க்கை என்ற துயரம் மிக்க அவலமான சூழ்நிலையே சிறிலங்காப் படைகளால் யாழ்.மாவட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. சுருக்கமாகச் சொல்வதாயின் யாழ்ப்பாணம் தமிழ் மக்களுக்கு திறந்த வழிச் சிறையாகிவிட்டது.

சிறிலங்கா அரசாங்கமோ சமாதானப் போர்வையைப் போட்டுக் கொண்டு தமிழின அழிப்பினை மேற்கொள்வதற்காக அதாவது ஒரு போரினை தமிழ் மக்கள் மீது திணிப்பதற்காகத் திட்டங்களைத் தீட்டி வேகமாகக் காய்களை நகர்த்துகின்றது. சிறிலங்காப் படைகளினது நெருக்குவாரங்கள் அதிகரிக்கும் இச்சூழல் யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றது. இனவெறிப் பிசாசுகள் பலி கேட்டு கதவைத் தட்டி இழுத்தொடுப்பதற்கு முன் பாதுகாப்புத் தேடிச் செல்வது இயல்பான உடனடிப் பாதுகாப்புகான சரியான நடவடிக்கையாகும்.

அன்புக் குரிய மக்களே! உங்களை உங்களின் குடும்பங்களை சிறிலங்காப் படைக்கும்பலது சீரழிப்பில் நின்றும் காத்துக்கொள்ளவதற்காக சிவில் நிர்வாகம் குலைந்துள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து உங்களது பாதுகாப்பை நிலைநிறுத்திக் கொள்ளும் வகையில் பாதுகாப்பு தேடி இராணுவத்தின் தலையீடு அற்ற பிரதேசங் களுக்குச் செல்லு மாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்' என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கட்டுமானச் சட்டம் அமுலில்

தமிழீழ கட்டடக் கட்டுமானச் சட்டம் இம்மாதம் 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக தமிழீழ சட்டவாக்கல் செயலகம் அறிவித்துள்ளது.

இச் சட்டம் நடைமுறைக்கு வந்த காலம் தொடக்கம் கட்டடங்கள் கட்டுவதற்கும் கட்டுமான ஒப்பந்தங்கள், நிறுவனங்களை நடத்துவதற்கும் கட்டடத் தொழிலாளர்களை அங்கீகரிப்பதற்குமான நடவடிக்கைகளை இச் சட்டத்தைப் பின்பற்றியே மேற்கொள்ளுதல் வேண்டும் என தமிழீழ சட்டவாக் கல் செயலகம் அறிவித்துள்ளது. (ச)

## குடும்பஸ்தரைக் காணவில்லை

அனலைதீவில் குடும்பஸ்தர் ஒருவரைக் காணவில்லை என மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அனலைதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த விக்னேஸ்வரமூர்த்தி விநாயகராஜா (வயது-27) என்பவரை கடந்த 16 ஆம் திகதியில் இருந்து காண்வில்லை என அவ் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-39)

# கடற்படையின் அச்சுறுத்தலையடுத்து மக்கள் தொடர்பகம் புனரமைப்பு

(புங்குடுதீவு)


புங்குடுதீவு மக்களால் உடைக்கப்பட்ட கடற்படையின் மக்கள் தொடர்பகம் பொது மக்களால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கடற்படையினரின் பாரிய அச்சுறுத்தலையடுத்து அதனைக் கட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

புங்குடுதீவுக் கடற்தொழிலாளர்களும் வர்த்தக சங்கமும் இணைந்து புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

மீன்பிடிப்பதற்கு வழங்கப்படும் பாஸ் நடைமுறை உட்பட பல்வேறு சிக்கல் நிலையை கடற்படையினர் ஏற்படுத்தி தம்மை இணங்க வைத்துள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை இரவு 7 மணிக்குப் பின்னர் மக்கள் நடமாட வேண்டாம் எனவும் பெண்கள் தனியாக பிரயாணம் செய்வதைத் தவிர்க்குமாறும் புங்குடுதீவுக் கடற்படையினர் கூறியுள்ளதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர். (ச-126)



காரைநகரில் கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளான ஆறு மீனவர்களில் நான்கு மீனவர்களை படத்தில் காணலாம்.

# கண்காணிப்புக்குழு மீதான தாக்குதல்கள் கண்காணிக்கும் நாடுகள் கடும் கண்டனம்

(கொழும்பு)

மட்டக்களப்பு போர்நிறுத்தக் கண்காணிப்பு அலுவலகம் மீதுகடந்த 13 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலுக்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இடம் பெற்றுள்ள டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது:

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைக் கண்காணிக்கும் பாரபட்சமற்ற பொது மக்கள் சார் அமைப்பு. இரு தரப்பினராலும் விடுக்கப்பட்ட அழைப்பின் பேரில் இந்தப் பணி மேற்கொள்ளப்படுகின்றது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இருதரப்பினர் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் முழு ஒத்துழைப்பும் எமது கண்காணிப்புக் குழுவினருக்கு இருந்து வருகின்றது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் அளிக்கப்பட்டிருக்கும் உறுதிமொழிகளுக்கமைய கண்காணிப்புக்குழுவினரது பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் கண்காணிப்புக்குழுவினர் தமது கடமைகளை செய்வதற்கான வாய்ப்புக்களை உருவாக்கித் தருவதும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள இரு தரப்பினரிடமும் இருந்து நாம் எதிர்பார்ப்பதாகும்.

மட்டக்களப்பு கண்காணிப்புக்குழு அலுவலக வளாகத்தில் நிறுத்தபட்டிருந்த வாகனத்தில் வெடிகுண்டு பொருத்தப்பட்டு வெடிக்கச் செய்யப்பட்டுள்ளது. இதில் நான்கு வாகனங்கள் சேதமடைந்துள்ளன. எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## தொழிலில்...

தினம் (வயது 54), சுப்பிரமணியம் லோகேஸ்வரன் (வயது 36), மகாலிங்கம் லிங்கராசா (வயது 26), முருகேசு கந்தசாமி (வயது 40), அப்புத்துரை கிருபாகரன் (வயது 39) ஆகியோரே மோசமாகத் தாக்கப்பட்டு யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளார். இம் மீனவர்கள் அனைவரும் கடற்படையினரின் நடைமுறையின் படியே கடலுக்குச் சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவம் குறித்து யாழ்.மனித உரிமை ஆணைக் குழுவில் முறையிடப்பட்டுள்ளது. இதேவேளை இச்சம்பவம் குறித்து யாழ்ப்பாணம் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-132,133)

## சாவகச்சேரியிலும்...

மதிலொன்றுடன் மோதியநிலையில் அப்பகுதியில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. இது இவ்வாறிருக்க கொடிகாமத் தில் உள்ள இராணுவக் காவலரண் மீது மேற்கொள்ளப்பட்ட கிரனைட் தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் காயமடைந்துள்ளார். (ச-132,133,29,37)

## தமிழ் எம்.பிக்களால்...

ஆதரவு தெரிவித்தனர். இதேவேளை இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில் நான்கு சட்ட மூலங்கள் நிறைவேற்றப்பட் டுள்ளன.

இன்று அவசர காலச்சட்டம் மீதான விவாதம் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச,39)

# பஸ் ஆற்றில் பாய்ந்து ஐவர் மரணம்

புல்மோட்டையிலிருந்து திருகோணமலைக்குச் சென்ற பஸ் ஒன்று ஆற்றில் பாய்ந்ததில் ஐவர் உயிரிழந்தனர். ஜான்னோயா ஆற்றைக் கடப்பதற்காக படகுப் பாதையால் ஏறிய போது பஸ் கட்டுப்பாட்டையிழந்து ஆற்றில் பாய்ந்து நீரில் மூழ்கியது.

இதன் போது இரண்டு ஆண்களும் மூன்று சிறுவர்களும் பலியாகினர். சாரதியும் நடத்துனரும் காயங்களுடன் உயிர் தப்பினர். திருகோணமலை இ.போ.சபைக்கு சொந்தமான இப் பஸ்ஸில் 16 ற்கும் மேற்பட்டோர் இருந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ச)

# அன்ரன் பாலசிங்கத்தின் பயணத்தை...

கொழும்பில் நாடாளுமன்ற வளாகத்தில் ஊடகவியலாளரிடம் பேட்டியளித்த ஜாதிக ஹெலஉறுமயவின் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் இதனைத் தெரிவித்தார்.

எரிக்சொல்ஹெய்ம் மற்றும் பாலசிங்கம் ஆகியோர் இலங்கைக்குள் நுழைய யார் அனுமதி கொடுத்தவர்கள் என்பதை அரசாங்கம் தெரியப்படுத்த வேண்டும்.

விடுதலைப்புலிகளின் மீது ஐரோப்பிய ஒன்றியம் பயணத்தடை விதித்துள்ளது. ஆனால் அரசாங்கமானது எதுவித தடையையும் கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை. இலங்கைக்குள் பாலசிங்கம் நுழைவதை மகிந்த ராஜபக்ஷ தடுக்க வேண்டும்.

சில உறுதிமொழிகளின் அடிப்படையில் தான் தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷவை நாம் ஆதரித்தோம். ஜாதிக ஹெலஉறுமயவுக்கு அளித்த வாக்குறுதிகளை மகிந்த ராஜபக்ஷ காப்பாற்ற வேண்டும் என்றார்.

பாராளுமன்றத்துக்குள் தமிழ் உறுப்பினர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தை சபாநாயகர் லொக்கு பண்டாராவினால் தடுக்க முடியவில்லை. அதனால் அவர் உடனே பதவி விலகவேண்டும். எரிக்சொல்ஹெய்ம் மற்றும் பாலசிங்கத்தின் வருகை குறித்து கேள்வி எழுப்பிய போது தமிழ் உறுப்பினர்கள் இடையூறு செய்தனர்.

நாடாளுமன்ற செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் தமிழ் உறுப்பினர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அத்துரலிய ரத்னதேரர் மேலும் கூறினார். (ச)










இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.